FREE COPY

பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 06, புதன்கிழமை 19.04.2017 கதிர் 164

உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789 c/366

### கரைவலைப்பாடு அளவீட்டுப் பணிகளை அடுத்து

# தமிழ் - சிங்கள மீனவர்கள் இடையே கொக்கிளாயில் நேற்று முறுகல்



## வெளியேறினர் பிரதேச செயலக அதிகாரிகள்

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியில் தமிழ் - சிங்கள மீனவர்கள் இடையே நேற்று முறுகல் ஏற்பட்டது.

முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியில் கரைவலைப்பாடு அளவீட்டுப் பணிகள் தொடர்பிலேயே இரு தரப்பினருக்கும் இடையே முறுகல்நிலை தோன்றியது.

இது குறித்து அங்கிருந்து கிடைத்த தகவல்கள் வருமாறு:-

பக்கம் 18 >>>

### காணி விடுவிப்பு கள ஆய்வு:

## இன்று - முல்லைத்தீவில் நாளை - கிளிநொச்சியில் அடுத்த நாள் - யாழில்!

கொழும்பு, ஏப். 19

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பான கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் திகதிகளில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரியவந்தது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் தீர்மானப்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் - குறிப்பாகக் கேப்பாபிலவுப் பகுதியில் - காணி ஆய்வு இன்று இடம்பெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வைத்தியர் சிவமோகன் ஆகியோர் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் சிலரையும் அழைத்துக் கொண்டு இராணுவ அதிகாரிகள் சகிதம் முகாம் அமைந்துள்ள பகுதிகளுக்குள் சென்று, காணிகளை அடையாளம் காணும் கள ஆய்வில் ஈடுபடுவார்கள்.

அதேசமயம், முன்னைய ஏற்பாடுகளுக்கு மாறாக நாளை

பக்கம் 18 >>>

## வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினை; வடக்கு மாகாண சபையிடமே தீர்வு

### அவர்களே அதைப் பார்க்க வேண்டும் என்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஏப்.19

வடக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளை மாகாண மற்றும் மத்திய அரசுகள்தாம் தீர்த்து வைக்க வேண்டும் என வடக்கு மாகாணஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் எல்லாப் பிரச்சினைகளையும் தன்னிடமே கூறுகின்றார்கள் எனத் தெரிவித்த அவர், தான் அரசியல்வாதியோ அமைச்சரோ அல்ல எனவும் கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள், நியமனம் கோரி கடந்த ஒரு மாதமாகப் போராடுகின்றனர். பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்பது மாகாண, மத்திய அரசாங்கங்களின் கடமையாகும். எனக்குஅந்தக்கடமை இல்லை.

ஆனாலும், வடமாகாண

பக்கம் 18 >>>

## முள்ளிக்குளம் மண் மீட்புக்கு ஆதரவாக இன்று மன்னார் நகரில் பேரணி

### திரளுகின்றனர் மறை மாவட்ட பங்கு மக்கள்


மன்னார், ஏப். 19

மன்னார், முள்ளிக்குளம் மக்களின் காணி விடுவிப்புக் கோரி மன்னார் மறை மாவட்ட பங்கு மக்கள் மன்னார் நகரில் மாபெரும் பேரணி ஒன்றை இன்று புதன்கிழமை முன்னெ

பக்கம் 18 >>>

## கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்; மருதங்கேணியில் வேண்டாம்

### உடன் கைவிடுமாறு அரச அதிபருக்கு சுமந்திரன் அறிவுறுத்தல்



(எஸ்.நிதர்ஷன்)

வடமராட்சி கிழக்கு- மருதங்கேணியில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுமாயின், அது அப்பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பது விஞ்ஞான ஆய்வுகளூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அந்தச்

பக்கம் 18 >>>

## இரசாயனக் கலவை தெளித்ததே அனர்த்தத்துக்குக் காரணம்!

### மீதொட்டமுல்ல வாசிகள் கூறுகின்றனர்

கொழும்பு, ஏப்.19

மீதொட்டமுல்ல அனர்த்தத்துக்கு ஒருவகை இரசாயனக் கலவை தெளிக்கப்பட்டதே காரணம் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். சம்பவம் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர், குப்பைமேட்டின்மீது இந்த இரசாயனக் கலவை விசிறப்பட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அனர்த்தம் தொடர்பாக பிரதேசவாசி ஒருவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவர் கூறியவை வருமாறு:-

பக்கம் 18 >>>

## "சம்பந்தன் ஐயா நினைத்தால் முடியும்!" விரக்தியில் வேலையற்ற பட்டதாரிகள்!



மட்டக்களப்பு, ஏப். 19

"சம்பந்தன் ஐயா மௌனமாக இருக்கிறார். ஐயா நினைத்தால் எங்கள் பிரச்சினைக்கு முடிவு கட்ட முடியும். நாடாளுமன்றத்தில் வெளிநடப்புச் செய்து எமது கோரிக்கைகளுக்கு ஒரு முடிவைக் காண

பக்கம் 18 >>>




## கடும் வறட்சி காரணமாக 7 லட்சம் பேர் வரை பாதிப்பு

### வடக்கிலேயே நிலைமை மோசம்

கொழும்பு, ஏப்.19

நாட்டின் பல பகுதிகளிலும் நிலவும் கடும் வறட்சி காரணமாக 6 இலட்சத்து 90 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மேற்படி நிலையம் தெரிவித்தது. இங்கு 4

பக்கம் 18 >>>

# கிளிநொச்சியில் நிரந்தர வீடுகளின்றி 10 ஆயிரம் குடும்பங்கள் திண்டாட்டம்

கிளிநொச்சி, ஏப்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாது தற்காலிக வீடுகளில் வாழ்ந்துவரும் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள்குடியேறி 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதும் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் எவையும் கிடைக்காத நிலையில் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு தற்காலிக வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

அடிக்கடி நிலவும் சீரற்ற காலநிலை, அதி கூடிய வெப்பம் என்பவற்றால் துன்பங்களை அனுபவித்து வருகின்றன. அத்துடன் தொற்றுநோய்களின் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு வருகின்றன.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கவில்லை என்றும் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அபிவிருத்தி என்று பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் தமது நிலைப்பாடு தொடர்பில் எவரும் கவனம் எடுக்க வில்லை என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ)



## மே தினக் கூட்டத்துக்கு தொழிற் சங்கங்களை திரட்டும் பணியில் ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு தொழிற் சங்கங்களைத் திரட்டும் பணியை இப்போது ஆரம்பித்துள்ளது என்று அந்தக் கட்சியின் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கமைய இந்த முறை சுமார் 40 தொழிற்சங்கங்கள் இந்த மே தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.தே.கவின் மே தினக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சூரிய மின்கலத்தைப் பயன்படுத்தி மருதங்கேணியில் வீதி விளக்குகள்

வடமராட்சி, ஏப்.19

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 20 லட்சம் ரூபா நிதி உதவியில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மருதங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் சூரிய மின்கலத்தைப் பயன்படுத்தி வீதி மின் விளக்கு அமைக்கப்பட்டு வருகிறது என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 12 கோடி 70 லட்சம் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக சூரிய கலத்திலான வீதி விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## இலங்கை அபிவிருத்திக்கு உதவ முன்வந்தது குவைத்

கொழும்பு, ஏப்.19

இலங்கை அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உதவும் வகையில், ஒரு கோடி 65 லட்சம் அமெரிக்க டொலர்களை மேலதிக கடனாக வழங்க குவைத் நாடு நடவடிக்கை எடுத்துள்ளது.

குவைத் நாட்டிலுள்ள அரேபிய அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தில் இருந்து இந்த நிதி வழங்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

## உலகில் இருநூறு கோடி மக்கள் அசுத்த நீரையே அருந்துகின்றனர்

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

கொழும்பு, ஏப்.19

உலகில் சுமார் இருநூறு கோடி மக்கள் அசுத்த நீரையே அருந்தி வருகின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் பொது மக்கள் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதானி திருமதி மரியா நீரா வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இதன் காரணமாக வருடா வருடம் லட்சக் கணக்கான மக்கள் அசுத்த நீரால் ஏற்படும் நோய்களுக்குப் பலியாகி வருகின்றனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசுத்த நீரால் வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், போலியோ போன்ற ஆள்கொல்லிநோய்கள்ஏற்படுகின்றன.

உலகெங்கும் வயிற்றோட்டத்தால் வருடாந்தம் சுமார் ஐந்து லட்சம் மக்கள் உயிரிழக்கின்றனர். இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

உலகிலுள்ள 80 வீதமான நாடுகள் தங்களது மக்களுக்கு தூய நீரை வழங்குவதற்கான திருப்திகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.- என்றுள்ளது. (ஐ)

## சட்டவிரோத வலைகளை பயன்படுத்தியோர் கைது!

மன்னார், ஏப்.19

சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து, உள்நாட்டு மீனவர்கள் 13 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.



புல்மோட்டை, கொடுவகட்டுமலை கடற் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து கடற்படையினர், 3 டிங்கி படகுகளையும் தடைசெய்யப்பட்ட வலைகளையும் 350 கிலோ நிறையுடைய மீன்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

மீனவர்களையும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களையும் குச்சவெளிப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அனைத்துலக சைவமாநாடு யாழ்.பல்கலையில்

### வெள்ளி முதல் 3 நாள்கள் நடைபெறும்

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த சைவமாநாட்டின் கருப்பொருள் சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் என்பதாகும்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கு 131 ஆய்வுக் கட்டுரைகள் சைவசித்தாந்த மேன்மைகள் பற்றியும், இலங்கையரின் சைவசித்தாந்தப் பங்களிப்புப் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் நான்கு சமகால அமர்வுகளில் 24 அரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கு இந்த மாநாடு நிச்சயம் உதவும் என்றும் இந்த மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மட்டுமன்றி தென்கிழக்கு, கிழக்கு, பேராதனை, சப்பிரகமுவ ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆய்வாளர்களும், மாணவர்களும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் இந்தியாவிலிருந்தும் பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துறையினர் முதலாவது அனைத்துலகச் சைவமாநாட்டை 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாலியவெவ பிரதேசத்தில் மனித எச்சங்கள் மீட்பு!

கொழும்பு, ஏப்.19

புத்தளம் சாலிய வெவ பிரதேசத்தில் தலையற்ற மனித எச்சங்கள் சிலவற்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்து எம்.பி 20 ரக ரிவோல்டர் ஒன்றையும் சாலியவெவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மனித எச்சங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தனது உத்தியோகபூர்வ துப்பாக்கி ஒன்று கடந்த 4 ஆம் திகதி காணாமல் போயிருந்தது என்று அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

இந்த நிலையில் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# மயிலிட்டியில் ஆயுதக் கிடங்கு இல்லை இருப்பதாகக் கூறப்படுவது கட்டுக்கதை

## இப்படித் தெரிவித்தார் இராணுவத் தளபதி

மயிலிட்டியில் ஆயுதக்கிடங்கு இருப்பதாகச் சொல்லப்படுவது முற்றிலும் போலியான தகவல் என இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்பாதுகாப்புஅமைச்சில்நேற்று முன்தினம்இடம்பெற்றசந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி துறைமுகத்தைப் பொது மக்களின் பாவனைக்கு கையளிக்க மறுப்பு தெரிவிப்பது குறித்து கடற்படையினரிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய கடற்படையின் தேசியத் திட்டமிடல் பணிப்பாளர் குருகுலசூரிய –

“அவ்வாறு ஏதும் நடைபெறவில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். எனினும், கூட்டமைப்பினர் அவரின் பதிலை ஏற்கவில்லை.

மேலும், மயிலிட்டிப் பகுதியில் ஆயுதக் கிடங்கு இருப்பதாகவும், அதனை மாற்றவேண்டியுள்ளதனால்குறித்துபகுதியைவிடுவிக்க காலம் தாமதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றதோ எனக் கூட்டமைப்பினர்மீண்டும்கேள்வியெழுப்பினர்.

இதனையடுத்து பதிலளித்து பேசிய இராணுவத்தளபதி, “அவ்வாறு கூறப்படுவது பொய்யானகதையாகும்"எனக்குறிப்பிட்டார். எனினும், இராணுவத்தளபதியின் கருத்திற்கும் கூட்டமைப்பினர் மறுப்பு வெளியிட்டனர்.

எவ்வாறாயினும், அது உண்மையானதகவல்எனக்கூட்டமைப்பினர் மீண்டும் வலியுறுத்த, மறுபடியும் இராணுவத்தளபதி மறுப்பு வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் குறுக்கிட்டு பேசியநாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்விப்பட்ட தகவலையே அவர்கள் தெரிவித்துள்ளனர்எனக்குறிப்பிட்டுபிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தார். (ம)

# பரு. நீதிமன்றால் தேடப்பட்ட நபர் நாட்டுக் கையெறி குண்டுடன் கைது

## நேற்றிரவு அல்வாயில் வைத்துக் கைது

வடமராட்சி, ஏப்.19

வடமராட்சி அல்வாயில் இளைஞர் ஒருவர் நாட்டு வெடிகுண்டு ஒன்றுடன் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டார்எனப்பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். அந்த நபர் தாமே குண்டைத் தயாரித்தார் எனவும் அதுகையெறிகுண்டாகப்பயன்படுத்தக்கூடியது எனவும் பொலிஸார் கூறினார்.

அல்வாயைச் சேர்ந்த 21 வயதான மேற்படி இளைஞருக்கு எதிராக பருத்தித்துறைநீதிமன்றில் பல வழக்குகள் உள்ளன. அவர் வழக்குகளுக்கு சமுகமளிக்காமையால் அவருக்கு நீதிமன்றினால் நான்கு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்றிரவு 7.30 மணியளவில் அவர் வீட்டில் நிற்கிறார் என பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைஅடுத்து, அவர்கள்அங்கு சென்று அவரைக் கைது செய்தனர். அவரைக் கைது செய்த போது அவரிடம் இருந்து அவர் தயாரித்த நாட்டு வெடிகுண்டு (கையெறிகுண்டு) ஒன்று மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் கூறினர். (ம-40)

# அசாதாரண சூழ்நிலைகளால் தொழில் இழந்தோர் மேன்முறையீடு

## கால எல்லை டிசெ. 31 வரை நீடிப்பு

கொழும்பு, ஏப்.19

1983ஆம் ஆண்டு ஜுலைக் கலவரம் மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியான 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தொழில்களை இழந்தவர்களுக்குத் தமது தொழிலை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனப்பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது எனப் பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டுக்கான காலம் ஏற்கனவே 2006 ஆம் ஆண்டு டிசெம்பருடன் முடிவுற்றது. தற்போது இது இவ்வருடம் முடியும்வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வெளிநாடுகளில் உள்ளோர் இலங்கை அரசசேவையில் கடமையாற்றியிருப்பின், மீளவும் இணைந்து கொள்ளமுடியும். உள்நாட்டிலும் பயங்கரவாதப் பிரச்சினைகள் காரணமாகக் கடமைக்குச் செல்ல முடியாமற் போனதால் அரச தொழிலை இழந்தோர் மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்து மீளவும் இணைந்து கொள்ள முடியும் என்று என்று அந்தச் சுற்று நிருபம் தெரிவிக்கிறது. (இ-ச)

# அல்லாரை கிராம சேவையாளர் மீது மதுபோதைக் கும்பல் ஒன்று தாக்குதல்

## பொலிஸார் இதுவரை நடவடிக்கை இல்லை

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கொடிகாமம் அல்லாரை ஜே/322 கிராம சேவையாளர் மதுபோதைக் கும்பலால் தாக்கப்பட்டுப் பாதிக்கப்பட்ட நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

அல்லாரையைச் சேர்ந்த எம்.பிரகாஸ் என்ற அந்தக் கிராமசேவையாளர் உட்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி கிராம சேவையாளரைக்கடமைநேரத்தில்அவரைத் தாக்கியவர்கள் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட போதிலும், அவர்களை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லை எனத் தெரிய வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அல்லாரையில் உள்ள வீடொன்றில் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பியவாறு மதுபோதைக் கும்பல் ஒன்று, கொண்டாட்டத்தில் ஈடுபட்டது. இதனால் தங்களுக்குப் பெரும் இடையூறாக உள்ளது எனப் பிரதேச மக்கள் கிராம சேவையாளருக்குத் தெரியப்படுத்தினர்.

இந்நிலையில், அந்த வீட்டுக்குச்சென்ற கிராம சேவையாளர், வீட்டு உரிமையாளரை அழைத்துப் பாடல் சத்தத்தைக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்போது அவரும் அவரோடு சேர்ந்து மதுபோதையில் இருந்தவர்களும் கிராம சேவையாளரைக் கடுமையாகத் தாக்கினர் எனக் கூறப்படுகின்றது. இதன்போது அவரது கைத்தொலைபேசியையும் பறித்து எறிந்தனர்.

பாதிக்கப்பட்ட கிராம சேவையாளர் அது தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும், பொலிஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கிராம சேவையாளர் ஒருவரை அவரது கடமை நேரத்தில் தாக்கியவர்களைக் கைது செய்யாத பொலிஸாரின் செயற்பாடு தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடையே அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க மத்திய அரசுடன் ஆலோசனை

## வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தகவல்

உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவது தொடர்பாக மத்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பொருள்களுக்கான சந்தை வாய்ப்பினையும் வெளி உற்பத்தியாளருடனான தொடர்பினையும் ஏற்படுத்துவதன் மூலமே உள்ளூர் உற்பத்தியின் சந்தை வாய்ப்புத் தளத்தினை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

கிராம அபிவிருத்தி என்பது பாரம்பரியமாக இயற்கையால் வழங்கப்பட்டுள்ள காணிகளை விவசாயத்திற்கும் கால்நடை அபிவிருத்திக்கும் பாவிப்பதற்கு ஊக்கம் அளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில் நகர்ப்புறஆதிக்கம்மேம்பட்டுள்ளதால் கிராமப் புறங்களும் மாற்றம் அடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வடமாகாணக் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ‘கிராமிய வளர்ச்சியே உயர்ச்சி’ என்ற தொனிப் பொருளில் கண்காட்சி நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

கிராம அபிவிருத்தியுடன் தற்போது சுற்றுலாத்துறை, கைத்தொழில் அபிவிருத்தி, இளைப்பாறலுடன் சம்பந்தப்பட்ட தொழில்கள் எனப் பலதுறைகள் கவனத்திற்கு எடுக்கப்பட்டு வருகின்றன.

கல்வி, தொழில் முயற்சித் துறை போன்ற பலவற்றிலும் இப்பொழுது கிராம அபிவிருத்தித்துறை ஈடுபாடு காட்டி வருகின்றது. உள்ளூர் விளைபொருள்கள் ஒருபுறம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகையில் செய் பொருள்களை மேம்படுத்தலும் முன்னிலை பெற்று வருகின்றன.

உலகை மாற்றியமைப்பதற்காக ஐக்கிய நாடுகளால் தயாரிக்கப்பட்ட அண்மைய நிலைபேறு அபிவிருத்தி 2030ஆம் ஆண்டுக்கான இலக்குகளிலும் கூட நிலைபேறு கிராம முன்னேற்றமானது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டே எமது கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் கிராமிய வளர்ச்சியை உயர்ச்சி பெற வைக்கும் எண்ணத்துடன் இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளது.

தனியார் துறையினையும் மேம்படுத்தவேண்டிய அவசியம் எமக்குண்டு. இன்று அரசதுறை, தனியார் துறை, அரசசார்பற்ற நிறுவனங்களின் துறை என்று மூன்று துறைகளும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைத்து வருகின்றன.

கிராமிய வளர்ச்சியை மேம்படுத்துவதே எமது கொள்கை ஆகும். கிராமங்களை விட்டு மக்கள் போகா வண்ணம் அவர்கள் இருக்கும் இடத்திலேயே அபிவிருத்தியை ஏற்படுத்துவது அவசியம்.

ஏற்கனவே நாம் இடம் விட்டு இடம் மாறி புலம் பெயர்ந்து வந்துள்ளோம். குடி இருக்கும் எம் சொந்த மண்ணில் அபிவிருத்தியை நாம் உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

பாரிய செயற்றிட்டங்கள் எதுவும் உங்களால் நடைமுறைப்படுத்தப்படவில்லையே என்று சிலர் எம்மிடம் கூறியதுண்டு. அவ்வாறான செயற்றிட்டங்கள் மத்திய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

அவற்றிற்கு கூடுமானவரை நாம் ஒத்துழைப்பு நல்கி வருகின்றோம். ஆனால், அடிப்படையில் கிராமிய எழுச்சியையும் அபிவிருத்தியையும் உருவாக்குவதே எமது குறிக்கோள். – என அவர் மேலும் கூறினார். (ம)

# சர்ச்சையை ஏற்படுத்திய கட்டுரையை மீளப்பெற்றார் எழுத்தாளர் தமிழ்க்கவி

## மனம் வருந்துகிறார் எனவும் அறிவிப்பு

கரைச்சி கலாசார விழாவில் வெளியிடப்பட்ட ‘கரை எழில் 2016’ இல் தமிழ்க்கவி எழுதிய ‘கிளிநொச்சியும் மலையகத் தமிழர்களும்’ என்ற கட்டுரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அந்தக் கட்டுரையைத் தான் மீளப்பெற்றுக் கொள்கிறார் எனவும் அந்தக் கட்டுரை தொடர்பாக தான் மனம் வருந்துகிறார் எனவும் எழுத்தாளர் தமிழ்க்கவி எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவைக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தின் விபரம் வருமாறு –

07-04-2017 கரைச்சி கலாசார விழாவில் வெளியிடப்பட்ட கரை எழில் நூலில் ‘மலையகத் தமிழரும் கிளிநொச்சியும்’ எனும் கட்டுரையில் சில விடயங்கள் மலையகச் சமூகத்தை இழிவுபடுத்துவதாக ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் மக்கள் மத்தியில் ஒரு வித கொதிநிலையை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டதையடுத்து –

மேற்படி கட்டுரையில் ஒரு சில விடயங்கள் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என பல தரப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டதையிட்டு மக்களின் மனநிலைகளைக் கருத்தில் கொண்டு அவர்களது மனநிலைகள் பாதிப்புறா வண்ணம் –

அவர்களுக்கும் எனக்குமான நல்ல நட்புறவு தொடர்வதற்காகவும் நான் கட்டுரை தொடர்பாக எனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் குறித்த கட்டுரையைத் திரும்பப்பெற்றுக்கொள்கிறேன். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-70)

# ‘சண்டே லீடர்’ ஆசிரியர் படுகொலை; ஓய்வுபெற்ற படையினரிடம் நேற்று விசாரணை

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக இலங்கையின் முன்னாள் விமானப்படைத் தளபதி உள்ளிட்ட மூன்று ஓய்வு பெற்ற படை உயர் அதிகாரிகளிடம் நேற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளான மேஜர் ஜெனரல் குமார ஹேரத், மேஜர் ஜெனரல் மனோ பெரேரா ஆகியோரிடமே விசாரணைகள் நடத்தப்பட்டன. (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காணி விடுவிப்புப் பொறிமுறையை நேர்சீராக நடைமுறைப்படுத்துங்கள்!

வடக்கில் படையினர் வசமுள்ள தமிழ்ப் பொது மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக, நேற்றுமுன்தினம் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் இரண்டு நல்ல அம்சங்கள் ஒப்பேறியிருக்கின்றன.

✶ முதலாவது - காணி விடுவிப்புத் தொடர்பான விடயங்களைப் பரிசீலித்து ஆராய்வதற்கு, மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு பொறிமுறைக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

✶ மற்றையது - அடுத்த மட்ட படைத் தளபதிகளையும் வைத்துக் கொண்டு, இராணுவத் தளபதி திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறிய ஒரு விடயம்.

"நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறும் விடயம் ஒன்று தான். ஒரு சிவில் அரசாங்கத்தின் கீழ் செயற்படும் ஒரு சட்டரீதியான படையே நாம். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சிவில் அரசின் தலைவரான ஜனாதிபதி, எந்தக் காணியை விட்டு வெளியேறுமாறு எங்களுக்கு உத்தரவிடுவாராகில் நாம் அதிலிருந்து உடன் வெளியேறி விடுவோம். அதில் எந்தச் சந்தேகமும் கொள்ளத் தேவை இல்லை என்பதை நான் உறுதிபடக் கூற விரும்புகிறேன்." - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் வைத்துக் கொண்டு இராணுவத் தளபதி உறுதி தெரிவித்திருக்கின்றார்.

வடக்கில் மக்களின் காணிகளை விடுவிப்பதில் அரசுத் தலைமை பெரிதும் கரிசனையாக இருக்கின்றது என்பது போலவும் -

இராணுவமும் படைத் தலைமையுமே அதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன என்ற மாதிரியும் -

வெளியான செய்திகளுக்கு, தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு அறுத்து, உறுத்து, தெளிவுபடுத்திப் பதில் தந்திருக்கின்றார் இராணுவத் தளபதி. அதுவும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் இந்த விடயத்தை இரண்டு, மூன்று தடவைகள் திரும்பத் திரும்ப அழுத்திக் கூறி, அதனை வலியுறுத்தியிருக்கிறார் அவர்.

எனவே, காணி விடுவிப்பு விவகாரத்தில் இனியும் படைத் தரப்பைக் காட்டி ஒளித்துப் பிடித்து விளையாடும் போக்கை அரசுத் தலைமை காட்டக் கூடாது; காட்ட இயலாது.

அடுத்தது - விடுவிக்க வேண்டிய பொது மக்களின் காணிகள், அவற்றின் முன்னுரிமைத் தேர்வு ஆகியவை குறித்து நேரில் பார்த்துத் தீர்மானிப்பதற்குரிய ஒரு பொறிமுறைக்கு இணக்கம் ஏற்பட்டிருப்பதாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளைப் படைத்தரப்பும், மக்களின் பிரதிநிதிகளும் நேரில் சென்று பார்த்து, கள ஆய்வு செய்து, பரிந்துரைகளை முன்வைக்கும் ஏற்பாட்டுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு, கேப்பாபிலவில் பல நூறு ஏக்கர் காணிகள் படைத்தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகளில் எவை, எவை மக்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்பட்டவை, எவற்றில் மீளக் குடியேற மக்கள் காத்துக் கிடக்கின்றார்கள் என்பதைக் கண்டறிவதாயின், முதலில் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் நேரடியாக அங்கு செல்ல வேண்டும்; இடங்களை அடையாளம் காண வேண்டும். அவை குறித்து படைத்தரப்புக்குத் தகவலும், விளக்கமும் அளிக்க வேண்டும். தேவைப்பாடுகள், முன்னுரிமைகள் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

அதன் பின்னரே, இந்த விடயம் குறித்து ஒரு தெளிவான முடிவுக்கு வரலாம். அப்படி தெளிவான ஒரு முடிவுக்கு வந்து அதை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே தீர்வு கிட்டும்.

அதைவிடுத்து, மக்களின் பாவனைக்குரிய காணிகள், நிலங்களைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு, பாவனைக்குப் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களை விடுவித்து, அதனைக் காணி விடுவிப்பாகக் காட்டுவதில் அர்த்தம் ஏதுமில்லை.

ஆகவே, இப்போது எட்டப்படுள்ள தீர்மானம், பொது மக்களின் காணி விடுவிப்புக் கோரிக்கை தொடர்பில் ஆரோக்கியமான அம்சமாகும்.

இணக்கம் காணப்பட்ட பொறிமுறைத் திட்டம், முழு உண்மைத் தன்மையுடன் செயற்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் ஊடாக, பல வகைகளிலும் நொந்து போயுள்ள தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்கும் நிலை ஓங்கி உயர்வதற்கு வழி பிறக்கும் என்று நம்பலாம்.

கொழும்பு அரசுகளால் ஏய்க்காட்டப்பட்டும், பல தடவைகள் ஏமாற்றப்பட்டும், மிக நீண்ட காலமாக அல்லாடிய தமிழ் இனம், தமக்கான தேவைகளைப் பெற இயலும் என்ற எண்ணத்தையும் எதிர்பார்ப்பையும் எய்துவதற்கு வாய்ப்பு உண்டாகும் என்பதும் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்லவே.

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அவற்றின் உரிமையாளர்களின் பங்களிப்புடன் அவை அடையாளம் காணப்பட்டு, இயன்ற விரைவில் அவை மீள ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்குத் தற்போது உருவாக்கப்பட்ட பொறிமுறை உதவும் என நம்புவோமாக!

## வியட்நாமை உதாரணமாகக் கொண்டு இலங்கையை அபிவிருத்தி செய்வோம்

### பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.19

கடந்த 30 வருடங்கள் யுத்தத்துக்கு முகம்கொடுத்த வியட்நாமை முன்னுதாரணமாகக் கொண்டு எமது நாட்டையும் துரித அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வியட்நாமில் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் பிரதமருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

வியட்நாம் கடந்த 30 வருடங்கள் பெரிய யுத்தமொன்றுக்கு முகம்கொடுத்துவிட்டு, அடுத்து வந்த 20 வருடங்களில் துரித அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

வியட்நாமைப் போன்று எமது நாட்டு மக்களுக்கு சிறந்ததொரு வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நீண்டகால பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுக்க அரசு முயற்சிக்கின்றது.

இலங்கை கடந்த 30 வருடங்களாகப் போரால் பெரும் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அபிவிருத்தியின்றியே எமது நாடு தற்போது காணப்படுகிறது.

போருக்குப் பின்னர் மீண்டு வரும் வியட்நாம் போன்று இலங்கையையும் அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்வோம். - என்றார். (ஐ)

## வேகமாகப் பரவுகிறது இன்புளுவென்ஸா: அவசரகால நிலைமை பிரகடனமில்லை!

### சுகாதார அமைச்சர் மீது குற்றஞ்சாட்டுகிறது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஏப்.19

நாட்டின் பல பாகங்களிலும் இன்புளுவென்ஸா தொற்று வேகமாகப் பரவிவருகின்றநிலையில், அதனைக் கருத்தில் கொண்டு அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தவறிவிட்டார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தச் சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்ஸா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த வைரஸ் தொற்றால் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஏனைய விடயங்களைக் கருத்தில் கொள்ளாமல் சுகாதார அமைச்சர் என்ற வகையில் ராஜித சேனாரத்ன, இந்த நிலைமை குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

எனவே, தட்டுப்பாடு நிலவும் வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துவகைகளை உடனடியாக அனுப்பிவைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## அதிகரித்துவரும் வாகன விபத்தை கட்டுப்படுத்தத் துரித நடவடிக்கை

கொழும்பு, ஏப்.19

அதிகரித்துவரும் வாகன விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஹட்டன் மற்றும் நுவரெலியா பகுதிகளில் அதிகரித்து வரும் வாகனவிபத்தைக் கட்டுப்படுத்த ஹட்டன் விசேட பொலிஸார் வாகனங்களைச் சோதனை செய்து அறிவுறுத்தி வருகின்றனர்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் ஹட்டன் குடாகம பகுதியில் இவ்வாறு சோதனை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதி பத்திரம் மற்றும் சாரதி மது அருந்தியுள்ளாரா என்று பரிசோதனை செய்யும் பொலிஸார், முழுமையாக வாகனங்களையும் அதனுடைய தரங்களையும் குறித்து சோதனை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை வாகனங்களின் சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஏனைய பகுதிகளிலும் பொலிஸாரின் இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜெயந்தன் படையணியைத் தேடி வேட்டை ஏறாவூர்ப் பகுதியில் நடமாடுகின்றனரா?


மட்டக்களப்பு, ஏப்.19

தமிழீழ விடுதலைப் புலிகளின், ஜெயந்தன் படை அணியைச் சேர்ந்த உறுப்பினர்களை தேடும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்புத் தகவல் தெரிவிக்கின்றது.

அந்தப் படையணியிலிருந்து தப்பிச்சென்று, தென்னிந்தியாவில் தலைமறைவாகி வாழ்ந்தவர்களில் சிலர் நாட்டுக்குள் மீண்டும் வந்துள்ளனர் என்று தகவல் கிடைத்ததையடுத்தே, இந்தத் தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜெயந்தன்படையணியைச் சேர்ந்தவர்களில் சிலர், மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலேயே, நடமாடிவருகின்றனர் என்று பாதுகாப்புத் தரப்பு கூறுகிறது.

தங்களுடைய பொலிஸ் பிரிவில், சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் மற்றும் புதிய நபர்கள் தென்பட்டால், அவ்வாறானவர்கள் தொடர்பில், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும், பாது காப்பு தரப்பினர், பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-ச)



விபத்தற்ற பயணமே விருப்பத்துக்குரிய பயணம்!

வேகமாக ஓட்டுவதற்கு முன் சற்றுச் சிந்தியுங்கள்

வாகனம் செலுத்தும் போது, எப்போதும் இடப்பக்கமாகப் பயணம் செய்யவும். ஆனால், வாகனங்களை இடப்பக்கமாக முந்துவது சட்டப்படி குற்றமாகும். முன்னால் தெளிவாக இருந்தால் மட்டும் ஏனைய வாகனத்தை முந்திச் செல்ல வேண்டும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

20.04.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 10.20 வரை
திதி: நவமி பி.இ. 1.12 வரை

சுபநேரம் : 7.32 - 9.02 வரை
இராகுகாலம் : 1.32 - 3.02 வரை

# மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவு; ஆரம்ப கட்ட கள ஆய்வுகள் நிறைவு



கொழும்பு, ஏப். 19

மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் ஒருபகுதி சரிந்து வீழ்ந்தமைதொடர்பானஆரம்பக் கட்ட கள ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன என்று பேராதனை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் தொடர்பாக எதிர்வரும் நாள்களில் இரு வேறு ஆய்வுகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் சூழல் பொறியியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுருத்த கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பேராதனை பல்கலைக்கழகத்தின் விசேட குழுவொன்றை ஆய்வு நடவடிக்கைகளுக்காக நியமிப்பதற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் உபுல் திசாநாயக்க நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்தக் குழுவில் பல்கலைக்கழக புவியியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 10 விரிவுரையாளர்கள் அடங்கியுள்ளனர்.

இதேவேளை, மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் ஒரு பகுதி சரிந்து வீழ்ந்ததால், வீடுகளை இழந்த மக்களின் விவரங்களை திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பணிகளை விரைவாக நிறைவுசெய்த பின்னர், அந்த மக்களுக்கான காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர குறிப்பிட்டார்.

இது தொடர்பாக காணி அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் வினவிய போது, பிரதேசத்தில் அடையாளம் காணப்படும் காணிகளை மக்களுக்காக விடுவிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் மீண்டும் அனர்த்தங்கள் ஏற்படும்?



கொழும்பு, ஏப். 19

மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் மீண்டும் அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய ஆபத்து உள்ளன என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மழை பெய்தால் மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் மீண்டும் சரிவு ஏற்படும் என தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அமைப்பின் மண் சரிவு ஆய்வு மற்றும் ஆபத்து தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளும் இயக்குநர் ஆர்.டிம்.எஸ்.பண்டார தெரிவித்துள்ளார்

உண்மையில் குப்பைமேடு சரியவில்லை, குப்பைமேட்டின் பாரத்திற்குமண்மேடுஉடைந்து விழுந்துள்ளது.

இங்கு குப்பை மேட்டை சுற்றியுள்ள வீடுகள் ஒரு பக்கம் தள்ளப்பட்டுள்ளதுடன், மேல் பக்கமாக உயர்ந்துள்ளது. இந்த நிலைமையை நாங்கள் மண் சரிவு அனர்த்தமாகவே கருதுவோம்.

இவ்வாறான சம்பவம் ஒன்று இலங்கையில் இடம்பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும். தற்போதைக்கு குப்பை மேட்டில் குப்பை போடாமையினால் ஆபத்துக்கள் இல்லை.

எனினும் எதிர்வரும் நாள்களில் மழைபெய்தால் குப்பை மேட்டில் மற்றுமொரு அனர்த்தம் ஏற்படக் கூடும். இதனால் குப்பை மேட்டைச் சுற்றி ஆபத்தான எல்லையாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அங்கு வசிப்பவர்களை அங்கிருந்து செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான பகுதியில் கிட்டத்தட்ட 130 வீடுகள் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# தொற்று நோய் பரவுவதைத் தடுக்க மீதொட்டமுல்ல பகுதியில் நடவடிக்கை!



கொழும்பு, ஏப். 19

மீதொட்டமுல்ல பகுதியில் தொற்று நோய் பரவுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டுசரிவை அடுத்து, அந்த பகுதியில் நோய் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மத்தியில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனினும்இதனைத்தடுக்கும் வழிமுறைகள் தற்போது கையாளப்படுவதாக, வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி தனிமனித சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நுளம்பு உள்ளிட்ட நோய் காவிகளின் ஊடாக ஏற்படுகின்ற நோய் பரவலையும் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# யானை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை!



வவுனியா, ஏப். 19

காட்டு யானையொன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குழப்பம் விளைவிக்க முயற்சித்தயானை ஒன்றை வனவளத்துறை உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இந்த, துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து வவுனியா வனவளத்துறை காரியாலயத்தில்அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் வனவளத்துறை அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் உள்ள கொம்பு வைத்த குளத்துக்கு அருகில் உள்ள மிகப் பெரிய குழி ஒன்றில் சில யானைகள் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழியில் வீழ்ந்த நான்கு யானைகளை மீட்கும் போது, யானையொன்று உயிரிழந்தது.

அந்த நடவடிக்கையின் போது, ஆண் யானை ஒன்று வனவளத்துறைஅதிகாரிகளைத் தாக்க முற்பட்டது.

இதன்போதுவனவளத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் யானை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் தேடி வந்த யானைகளே இவ்வாறு குழியில் வீழ்ந்து விட்டன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

# தொடரும் மீதொட்டமுல்ல நிவாரணப் பணி!

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததால் ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து மக்களைக்காப்பற்றி நிவாரணம் வழங்கும் நடவடிக்கைநேற்றும் தொடர்ந்தது.

இந்தப் பணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர், விசேட அதிரடிப்படையினர், காவல்துறையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணியாளர்கள் ஆகியோர் உயிர் தப்பியோரின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 14 ஆம் திகதி மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் ஒரு பகுதி சரிந்து விழுந்ததில் பல வீடுகள் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சுமார் 1050 இற்கு மேற்பட்ட பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுவரும் இதேவேளை 15 மண் அகழ்வு இயந்திரங்களும் 15 குப்பைகள் அகழ்வு ட்ரக் வண்டிகளும் அந்தப் பகுதியைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் காவல்துறையினர் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்எனவும்காணமல்போனோரை கண்டுபிடிக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம் பெறுகிறது எனவும் இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்னகுறிப்பிட்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களின் 27 உடல்கள் இதுவரையில் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு படையினரின் உதவியுடன் பிரதேச செயலாளர் தலைமையிலான அரச அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக மதிப்பீடு மற்றும் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் நிவாரண நடவடிக்கைகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் பணிகள் இரவு - பகலாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .தேவை யேற்படும் பட்சத்தில் மேலதிக இராணுவத்தினரை ஈடுபடுத்தத் தாம் தயாராகவுள்ளோம் என்றும் இராணுவ ஊடக பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டமைக்கு நல்லாட்சி அரசின் சீர்கெட்ட நிர்வாகமே காரணம்!

## வியாழேந்திரன் எம்.பி. சாடல்

ஏறாவூர்,ஏப்.19

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து அப்பாவி மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டமைக்கு, நல்லாட்சி என்று சொல்லப்படும் ஆட்சியாளர்களின் சீர்கெட்ட நிர்வாகமே காரணம்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஏறாவூர் சக்ஸஸ் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரை வருட விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் குப்பைமேட்டுப் பிரச்சினை தொடர்பாக மீதொட்டமுல்ல மக்கள் வீதிக்கு இறங்கி பலதடவை ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர். அரசுக்கு பல தடவைகள் அழுத்தம் கொடுத்துள்ளனர். ஆனால், அந்த மக்களுக்கு கடந்த கால அரசோ, நல்லாட்சி அரசோ எவ்விதமான தீர்வையும் பெற்றுக்கொடுக்கவில்லை .

நாடு முழுவதும் உள்ள மக்கள், பல்வேறு மகிழ்ச்சியான கனவுகளுடன் குடும்பமும் சுற்றமும் என ஒன்று கூடி தமிழ், சிங்களப் புத்தாண்டை கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில், ஒரு சில மணித்தியாலங்களில் அப்பாவி



மக்களின் அவலக்குரல் ஒலித்த கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதற்கெல்லாம் காரணம் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்குத்தான்.

எமது நாட்டில் மக்களுக்கு எதிராக என்ன நடந்தாலும், உயிர்கள் பலியான பிறகு தான் உரிய நடவடிக்கை எடுக்கின்றோம் என அரசியல்வாதிகள் வாக்குறுதி அளிப்பார்கள். அதற்கு மீதொட்டமுல்ல மக்களின் குப்பைமேட்டுப் பிரச்சினை மிகச் சிறந்த உதாரணமாகும். -என்றார். (ச)

## நீரில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு!


அம்பாறை,ஏப்.19

அம்பாறை பாணாமைப் பிரதேசத்திலுள்ள குளத்தில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பாணாமையைச் சேர்ந்த பீ.கே.பிரமாந்த (வயது-22) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மூன்று நண்பர்களுடன் சேர்ந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நீராடிக் கொண்டிருந்தபோதே, அவர் திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.

## அக்கரைப்பற்று - பொத்துவில் விபத்து: இளைஞர் உட்பட இருவர் உயிரிழப்பு!



அக்கரைப்பற்று,ஏப்.19

அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரும், 45 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது, இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய நபர் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## தியாக தீபம் அன்னை பூபதியின் 29ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு



தியாக தீபம் அன்னை பூபதியின் 29 ஆம் வருட நினைவு நிகழ்வுகள் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெறும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை இணைப் பாளர் கணேசன் பிரபாகரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள அனைத்து போராளிகளையும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அழைத்துள்ளனர். (ச)

## மட்டு.மாவட்ட பட்டதாரிகள் முறைப்பாடு!

*மட்டக்களப்பு,ஏப்.19*

*சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தங்களுக்கு, இரவுவேளைகளில் சிலர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் என மட்டக்களப்புமாவட்ட வேலையற்ற பட்டதாரிகள், நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .*

*இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்புமாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் .சங்கத்தின் தலைவர் ரி.கிஷாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*நிரந்தர நியமனம் வழங்கக் கோரி காந்தி பூங்காவுக்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*(ச)*

## கிண்ணியாவில் டெங்குக்கு கொன்ஸ்டபிள் பலியானார்!

திருகோணமலை கிண்ணியாவில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிஞ்சாங்கேணியைச் சேர்ந்த அபூ ஹனீபா நயீம் (வயது-44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடந்த 13 ஆம் திகதி சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவந்த இவர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்நிலையில், இவருக்கு அதிதீவிர பிரிவில் சிகிச்சை அளிக்க வேண்டி இருந்தது. இதனை அடுத்து, நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் இவர் உயிரிழந்துள்ளார்.

ஜனவரி முதல் இதுவரையில் திருகோணமலை மாவட்டத்தில் மட் டும் 17 பேர் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'மீனகயா' மீது கல் வீச்சு பயணி ஒருவர் காயம்!

மட்டக்களப்பு,ஏப்.19

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பயணித்த 'மீனகயா' என்ற ரயில் மீது மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில், பயணி ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, திராய்மடுப் பகுதியில் வைத்தே இனந்தெரியாதோரால் இந்தக் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, பிரஸ்தாப ரயில் சில நிமிடங்கள் அவ்விடத்தில் தாமதித்துப் பின்னர் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

## நல்லாட்சி அரசின் போக்கால் விரக்தியில் சிறுபான்மையினர்!

அம்பாறை,ஏப்.19

நல்லாட்சி அரசை உருவாக்குவதற்குப் பக்கபலமாக இருந்த சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை அரசு கண்டு கொள்ளாமல் இருக்கிறது. இதனால் மக்கள் விரக்தியில் உள்ளனர்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டத்துக்கான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

துன்பத்துடன் வாழ்ந்துவந்த சிறுபான்மையின மக்கள் நல்லாட்சி என்ற வார்த்தையை மட்டும் நம்பி வாக்களித்து, ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தனர். இந்த ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்தும், சிறுபான்மையின மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றாமல் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இதனால், பெரும் எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் போராட்டம் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுவரும் போராட்டம் என்பன தொடர்பில் அரசோ அல்லது மக்கள் வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள் பிரதிநிதிகளோ எந்தவிதத் தீர்வையும் முன்வைக்கவில்லை.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் பல வருடங்களாக இருந்து வரும் தீர்க்கப்படாத பல காணிப் பிரச்சினைகள், இறக்காமம் மாணிக்கமடு தமிழ் பிரதேசத்தில் பலவந்தமாக வைக்கப்பட்ட புத்தர் சிலைப் பிரச்சினை மற்றும் 30 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், அவர்களது வாழ்வாதாரம் போன்ற எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் இந்த நல்லாட்சி தீர்வை முன்வைக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையின மக்கள் எவ்வாறான இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்தார்களோ, அதே பிரச்சினைகளை இந்த ஆட்சிக்காலத்திலும் மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசானது வைத்துக் கொள்வதற்காக அளவு கடந்த அமைச்சுப் பதவிகளையும் அவர்களுக்கான சுகபோகங்களையும் வழங்கி, பணம் விரயம் செய்யப்படுகின்றதே தவிர, மக்கள் நலனில் காத்திரமான எந்தவொரு நடவடிக்கையை இந்த அரசு முன்னெடுக்கவில்லை.-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகள் பிலியந்தலையில் கொட்டுவதற்கு அனுமதி!

## குறிப்பிட்ட சில நாள்களுக்கு மட்டும்



கொழும்பு, ஏப். 19

கொழும்பு நகர சபையால் சேகரிக்கப்படும் குப்பைகளை பிலியந்தலை கரதியான பகுதியில் கொட்டுவதற்கு கொழும்பு மாநகரசபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்ததை அடுத்து, கொழும்பு மாநகரசபை நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவை கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இதன்பிரகாரம், கொழும்பில் நாள் ஒன்றுக்கு சேரும் 350 மெற்றிக் தொன் குப்பைகளை பெற்றுக்கொள்ளுமாறு கழிவு முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் 28ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, கொழும்பில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை குறிப்பிட்ட அந்தக் பகுதிக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகரசபையின் ஆணையாளர் வீ.கே.ஏ. தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் சாதாரணமாக 3 நாள்களுக்கு மேல் குப்பைகள் அகற்றப்படாவிட்டால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மீதொட்ட முல்ல சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை வைப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சவப்பெட்டிகள் மிகவும் தரம் குறைவானதென அந்தப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்த சவப்பெட்டிகள் உடைந்துவிடாமல் இருப்பதற்கு துணியால் கட்டி சடலங்களைக் கொண்டு செல்வதனை காண முடிந்ததென மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த சவப்பெட்டிகள் ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கக் கூடும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்தச் சடலங்களை 'எம்பம்' செய்யாமல் பொலித்தீன்பையில் சுற்றிவைத்திருந்தது என்றும் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## நுரைச்சோலை மின்பிறப்பாக்கியை ஆராய சீன நிபுணர்களிடம் இருந்து ஒத்துழைப்பு!



செயலிழந்துள்ள நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் தொடர்பில் ஆராய்வதற்கு சீன நிபுணர்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது என்று மின்சக்தி மற்றும் மீள் புதுப்பித்தல் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

செயலிழந்துள்ள மின்பிறப்பாக்கி இயந்திரத்தை மீண்டும் மின்சார கட்டமைப்புடன் இணைத்துக்கொள்வதற்கு ஒரு வாரம் எடுக்கும்.

அனல் மின்நிலையத்தின் முதலாம் மின் பிறப்பாக்கி இயந்திரமே அடிக்கடி செயலிழப்பதாகவும், அதனை புனரமைப்பதற்கு சீன மற்றும் வெளிநாட்டு விசேட நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மின் பிறப்பாக்கி இயந்திரம் செயலிழந்துள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று நுரைச்சோலைக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

## தற்போதைய அரசியல்வாதிகளுக்கு மே தினம் பற்றி தெரியவில்லை!

### ஜே.வி.பி. உறுப்பினர் லால்காந்த பரிகாசம்



கொழும்பு, ஏப். 19

மே தினம் பற்றி தற்போதைய அரசியல்வாதிகளுக்கு தெரியவில்லை என்று ஜே.வி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே தினத்தின் மெய்யான அர்த்தம் என்ன என்பது பற்றி பலருக்குத் தெரியவில்லை.

1886 ஆம் ஆண்டில் சர்வதேச மே தினத்தை வென்றெடுத்த உழைக்கும் வர்க்கம் பற்றியும் தெரியவில்லை.

மே தினத்தை கொண்டாட எந்தவொரு நிறத்திலான கொடியையும் கொண்டு வருமாறு அண்மையில் கூட்டு எதிர்க்கட்சியின் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார்.

இந்தக் கருத்து வெட்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். வெசாக் பௌர்ணமி தினம் பௌத்த கொடியைக்கொண்டே அனுஷ்டிக்கப்படும்.

வேறு கொடியைக் கொண்டு அனுஷ்டித்தால் அது பௌத்த மதத்தை அவமரியாதை செய்வதாகவே அமையும்.

செம்மே தினக் கூட்டத்திற்கு வெறும் நிலக் கொடிகளை கொண்டு வருமாறு கோருவது பொருத்தமற்றதாகும்.

இதன்மூலம் கூட்டு எதிர்க்கட்சி மே தினக் கூட்டத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது.

டலஸ் அழகப்பெரும போன்றவர்கள் உழைக்கும் வர்க்கத்தை இழிவுபடுத்தியுள்ளனர்.

இந்த அவமானங்களிலிருந்து மீள்வதற்கு உழைக்கும் வர்க்கத்தினர் ஜே.வி.பியுடன் இணைந்து கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பச்சை மே தினம் பற்றிப் பேசுகின்றது.

மே தினத்தின் அர்த்தம் புரியாமலேயே இவ்வாறு பேசுகின்றனர்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய சுதந்திர முன்னணியின் தீர்மானமிக்க அரசியல் குழு கூட்டம்!

### 17 பேர் மாத்திரமே கலந்துகொள்கின்றனர்



கொழும்பு, ஏப். 19

தேசிய சுதந்திர முன்னணியின் தீர்மானமிக்க அரசியல் குழுக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது என்று அந்தக் கட்சியின் உள்ளகத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தக் கட்சியின் அரசியல் குழுவைச் சேர்ந்த 17 பேர் மட்டுமே இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

விமல் வீரவன்ஸ தனக்கு பிணை வழங்க வேண்டும் என கோரி விளக்கமறியலினுள் உண்ணாவிரதம் இருந்தமை மற்றும் அதனை முடித்துக் கொண்டமை தொடர்பில் அந்தக் கட்சியின் அரசியல் குழுவின் பெரும்பான்மையினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்த செயலினால் கட்சிக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. இந்த கட்சி மக்கள் மத்தியில் நகைச் சுவைக்கு உள்ளாகியுள்ளதாக அந்தக் கட்சியின் பிரதான செயலாளர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களின் கருத்தாகும்.

விமல் வீரவன்ஸ உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்சியில் இது தொடர்பில் அறிவிக்கவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விமல் பிணையில் விடுதலையாகி வீட்டிற்குச் சென்றதன் பின்னர் இதுவரையில் அமைதியாக இருப்பதனால் கட்சியின் அரசியல் குழுவுக்குள் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையின் இன்று 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள அரசியல் கூட்டம், அந்த கட்சியின் தலைவரான விமல் வீரவன்ஸவின் அரசியல் எதிர்காலத்திற்கும் இந்தக் கட்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலும் தீர்மானமிக்கதாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

. இந்த நிலையில் விமல் வீரவன்ஸவின் அரசியல் செயற்பாடு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## பேராதனைப் பல்கலை கல்வி மீள ஆரம்பம்!

பேராதனைப் பல்கலைக்கழகம், நேற்று முதல் மீண்டும் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

காய்ச்சல் நோய்த் தொற்று காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி உபுல் பீதிஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு இடையே ஒருவகை காய்ச்சல் பரவியதன் காரணமாக, கடந்த 4 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நோய்த் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த ருஹுணு பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் முதல் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தையைக் காட்டில் வீசியெறிந்த பெண் சிலாபம் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப்.19

பிறந்த பச்சிளம் குழந்தையை காட்டில் வீசியெறிந்த தாயொருவரை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிலாபம் அருகே மாதம்பை - ஹேனேபொல, கல்முருவ பிரதேசத்தில் வசித்த 37 வயதான திருமணமாகாத பெண்ணொருவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை தனது வீட்டில் வைத்து குழந்தையைப் பிரசவித்துள்ள அவர், அதனை அயலிலுள்ள காட்டுப் பகுதியில் வீசியெறிந்துள்ளார்.

மாடுமேய்க்கச் சென்ற ஒருவர் குழந்தையின் அழுகுரல் கேட்டு, பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளார்.

இதன் பின்னர் குழந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டு தற்போது சிலாபம் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் குழந்தையின் தாய் என்று சந்தேகிக்கப்படும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மருத்துவர் அம்பிகைபாகனுக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிலை




தென்மராட்சி, ஏப்.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, பளை மற்றும் முழங்காவில் வைத்தியசாலைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்று அண்மையில் அமரத்துவமடைந்த மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனுக்கு அவரிடம் சிகிச்சை பெற்ற மக்களால் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக சிலை அமைக்கப்படவுள்ளது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு முழங்காவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் அமரர் மருத்துவர் அம்பிகைபாகனுக்கு வைத்தியசாலை முன்பாக சிலை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள், வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் த.குகதாசன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், ஓய்வுநிலை மருத்துவர் ச.சி.அருளானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் ச.சபாரத்தினம், சாவகச்சேரி நகரசபை ஓய்வுநிலை மராமத்து அத்தியட்சகர் எம்.பீ.நடராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-10)

## தினசரி ராசி பலன் 19.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 6 ஆம் நாள் அஷ்டமித்திதி பி.இ. 4.07 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: உத்தராடம் இரவு 12.20 மணி வரை. பின்னர் திருவோணம். அமிர்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 12.09 மணி முதல் 1.42 மணி வரை. சுபநேரம்: மாலை 4.29 மணிமுதல் 5.59 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை அஷ்டமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தராடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரத் துறையில் தொழிலுக்கேற்ப ஊதிய மின்மை காணப்படும். கடன் தொல்லை அதிகரிக்கும். தேகசுகம் மத்திமமாக இருக்கும்.

**ரிஷபம்:** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். தொழில் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும், வருவாயும் ஏற்படும். புதிய தொழிலை ஆரம்பிக்க நல்ல நாள்.

**மிதுனம்:** அலைச்சல் மிகுந்த நாள். மாணவர்கள் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்ல வேண்டி அதற்குரிய ஆவணங்களைத் தேடுவார்கள்.

**கடகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழில் முயற்சியில் கஷ்டமும், நிம்மதியின்மையும் ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். தொழில் விருத்தியும், கௌரவமும் பெருகும். சகோதர வழி உதவிகள் கிட்டும்.

**கன்னி:** மேன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பிள்ளைகளால் நன்மை, வருவாய், செல்வாக்கு என்பன அதிகரிக்கும். கல்வி முன்னேற்றத்தையும் பெறுவார்கள்.

**துலாம்:** துன்பமான நாள். தொழில் துறைகளில் வருவாய் குன்றும். வீண் பிரச்சினைகளும், செலவினங்களும் உண்டாகும். தேகசுகம் பாதிக்கப்படும்.

**விருச்சிகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணபலம் குறையும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**தனுசு:** நன்மையான நாள். உத்தியோகத்தில் முன்னேற்றமும், உயர்வும், கௌரவமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இடம்பெறும்.

**மகரம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தொழில் விருத்தியடையும். தொழிலாளர்கள் சம்பள உயர்வு பெறுவார்கள்.

**கும்பம்:** குழப்பமான நாள். குடும்பத்தில் அபிப்பிராயபேதம் தோன்றும். ஏமாற்றமும், பண விரயமும், அவமானமும் ஏற்பட இடமுண்டாகும்.

**மீனம்:** கீர்த்தியான நாள். தொழில் விருத்தி, பண வருவாய் முதலியன பெருகும். பெரியோர்களின் நன்மதிப்பும், உயர்வுகளும் கிட்டும். தூர தேசப் பொருள் வரவு கிட்டும்.

சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## கடும் உஷ்ணமான காலநிலையால் ரயில் பயணத்தை தவிர்க்கும் மக்கள்

சமகாலத்தில் ரயிலில் பயணிப்பதை யாழ்ப்பாண மக்கள் விரும்புவதில்லை என்று யாழ். ரயில் நிலையத்தின் பயணச்சீட்டு கருமபீட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் கடும் உஷ்ணமான காலநிலை காரணமாக ரயிலில் பயணிப்பதை யாழ்ப்பாண மக்கள் பெரிதும் தவிர்த்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

எனினும், யாழ்ப்பாணம் - கொழும்பு வரையில் செல்லும் குளிரூட்டல் (ஏசி) வசதி கொண்ட கடுகதி ரயிலில் பயணிக்க ஆர்வம் கொண்டுள்ளனர்.

இதற்கமைய கடுகதி ரயில் பயணத்துக்கான ஆசனங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே முற்பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வழமையாக கடுகதி ரயில் பயணத்துக்கான ஆசனங்கள் 3 அல்லது 4 நாள்களுக்கு முன்னரே முற்பதிவுகள் செய்யப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு மீண்டும் அழைக்கப்படுகிறார் அர்ஜுன்

இலங்கை மத்தியவங்கி அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டதன் பின்னர், மீண்டும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனிடம் சாட்சியம் பெற்றுக்கொள்வதற்கு மத்தியவங்கி முறிதொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டின் பின்னர் ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

மத்திய வங்கியிலுள்ள இன்னும் இரு அதிகாரிகள் சாட்சியம் பெற அழைக்கப்படவுள்ளனர். இவர்களில் ஒருவர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளமையால், முன்னாள் அதிகாரி ஒருவரிடம் முதலில் சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.

இவர்களிடம் சாட்சியங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அழைக்கப்படவுள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது. (ஐ)

# இலத்திரனியல் பஸ்கள் வருகின்றன இலங்கைக்கு!

இலங்கையில் இலத்திரனியல் பஸ் சேவையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டு மாத காலப் பகுதிக்குள் இலத்திரனியல் பஸ் சேவையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பஸ்சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இலங்கைக்கு ஆயிரம் பஸ்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக 5 வீதிகளில் இலத்திரனியல் பஸ்களை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு அரசுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலுவலக நேரத்தை அடிப்படையாகக் கொண்டு பஸ் சேவையை செயற்படுத்தவுள்ளார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த பஸ்களில் பயணிக்கும் போது பயணிகளிடம் சாதாரணகட்டணத்தைவிட இரண்டு மடங்கு கட்டணம் அறிவிட நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா கந்தரோடையில்!

சுன்னாகம், ஏப்.19

கந்தரோடை விளையாட்டுக் கழகமும், கந்தரோடை மக்கள் முன்னேற்ற இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கந்தரோடையில் நடைபெற்றது.

இதில் அதிதிகளாக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தி.பிரகாஸ், யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)




# காலம் கடத்தும் செயற்பாடு

செல்வரட்ணம் சிறிதரன்



இனியும் காலம் கடத்த முடியாது. இது நடவடிக்கைகளுக்கான காலம். எனவே, வார்த்தைகள் போதும். செயற்பட வேண்டும். நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசை நோக்கி சர்வதேச மன்னிப்புச் சபை இடித்துரைத்திருக்கின்றது.

வட பகுதிக்கான மூன்று நாள்கள் விஜயத்தை மேற்கொண்டிருந்த சர்வதேச மன்னிப்புச்சபையின் பொதுச் செயலாளர் சாளில் ஷெட்டியின் தலைமையிலான குழுவினர், பாதிக்கப்பட்ட மக்களை, அவர்கள் போராட்டம் நடத்தும் இடங்களில் நேரடியாகச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

இத்தகைய சந்திப்புக்களில் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தன்மையையும், நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுடைய உள்ளங்களில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்ற ஆவேசத் தீ உணர்வையும் அவர்கள் மிகவும் தெளிவாக உணர்ந்திருக்கின்றார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயம் புதிய அரசாலும் மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் நன்றாக அறிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய பின்னணி யிலேயே, சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் சாளில் ஷெட்டி, உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று கடுமையான வார்த்தைகளில், அரசுக்கு இடித்துரைத்திருக்கின்றார்.

மன்னிப்புச் சபை என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்ற ஓர் அனைத்துலக அமைப்பாகும். அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஒரு கருத்தை வெளியிடுகின்றார் என்றால், அதனை சாதாரணமானதாகக் கருதிவிட முடியாது.

பாதிக்கப்பட்ட மக்கள் நீண்ட காலமாகக் காத்திருந்துவிட்டார்கள். அவர்கள் இப்போது பொறுமை இழந்து விட்டார்கள். நீதிக்காக அவர்கள் காத்திருந்தது போதும். இனிமேலும் அவர்களை அவ்வாறு காத்திருக்கச் செய்ய வேண்டாம் என்று சாளில் ஷெட்டி அரசுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிவுரையையும், இடித்துரைப்பையும் அரசு உதாசீனம் செய்வது நல்ல முடிவாக இருக்க முடியாது.

இது பிரச்சினைகளை இழுத்தடிப்பதற்கும் காலத்தைக் கடத்துவதற்குமான தருணமல்ல. அரசு இனிமேலும் தாமதிக்காமல் செயற்படுவதற்காக வழங்கப்பட்டுள்ள அவகாசமாகும் என்றும் சாளில் ஷெட்டி குறிப்பிட்டுள்ளார்.

## போர்க்குற்றங்கள்

இலங்கையில் என்ன நடந்தது என்பதை உலகம் நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. எனவே, அந்த உண்மைகளை இனியும் எவரும் வெளிக் கொண்டு வர வேண்டிய தேவையில்லை. அந்த விடயங்கள் குறித்து விவாதிக்கவோ, ஆய்வு செய்யவோ இனிமேல் அவசியமில்லை. ஆள்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை உருவாக்குதல், நிவாரணமாக நீதியும், இழப்பீடும் வழங்குவது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது, உள்ளிட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் இலங்கை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை பிரதமரைச் சந்தித்தபோது நாங்கள் அவருக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம்' என செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது அரச படைகள் மனித உரிமைகளை மீறியிருக்கின்றன. சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கத் தவறியிருக்கின்றன. அந்த சட்டவிதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரச படைகள் மேற்கொண்டிருந்தன என்பது இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாகும்.

பொதுவான இந்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் பல்வேறு போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளமை பற்றிய தெளிவான தகவல்கள் ஏற்கனவே வெளியாகியிருக்கின்றன. நேரடி சாட்சியங்களாக, பாதிக்கப்பட்டவர்கள் அளித்துள்ள வாக்குமூலங்கள், அவர்களுடைய உடல்களில் காணப்பட்ட அடையாளங்களாகிய சான்றுகள் மருத்துவ ரீதியாக வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால் போல, சர்வதேச செய்தியாளர் கலம் மக்ரே தயாரித்து அளித்துள்ள இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற போர்க்குற்றச் செயல்கள் பற்றிய 'இலங்கையின்கொலைக்களம்'- கில்லிங் பீல்ட்ஸ் (Killing Fields), அதன் இரண்டாம் பாகமாக தண்டிக்கப்படாத போர்க் குற்றங்களை உள்ளடக்கி வெளிவந்த 'இலங்கையின் கொலைக்களம்', அதன் மூன்றாம் பாகமாக மோதல்கள் அற்ற பிரதேசம் - நோ பயர்ஸோன் (No Fire Zone) ஆகிய ஆவண வீடியோ படங்கள் இலங்கை அரச படைகளின் போர்க் குற்றச்செயல்களை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கின்றன. இந்த ஆவணப் படங்களை, தனக்கு எதிரான திட்டமிட்டதொரு பிரசாரச் செயற்பாட்டின் வெளிப்பாடாகச் சுட்டிக்காட்டி, இலங்கை அரசு முற்றாகப் புறந்தள்ளியிருக்கின்றது.

அரச படைகள் ஒருபோதும் மனித உரிமைகளை மீற வில்லை. போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்று யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடித்துக் கூறியிருந்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தத்தில் வெற்றி பெற்று பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த படையினரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த அனுமதிக்கமாட்டேன் என்று அவர் சூளுரைத்திருந்தார்.

## அரசாங்கத்தின் நிலைப்பாடென்ன?

யுத்தத்தில் அடைந்த வெற்றியை அடுத்து, நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தி, தமிழ் முஸ்லிம் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நல்லாட்சி புரிவதற்குப் பதிலாக, இராணுவத்தை முதன்மைப்படுத்தியதோர் எதேச்சதிகாரப் போக்கை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடைப்பிடித்து வந்தார்.

அவருடைய இந்த எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராகக் கண்டனங்கள் எழுந்தன. அரசியல் ரீதியான எதிர்ப்பு கிளம்பியது. நாட்டில் அழிந்து சென்ற ஜனநாயகத்துக்குப் புத்துயிரளித்து, புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகம் நாட்டில் தீவிரமாகத் தலையெடுத்திருந்தது.

மூன்றாவது முறையாகவும், தானே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற பேராசை கொண்ட ஆவேசத்துடன் 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ வலிந்து ஜனாதிபதி தேர்தலை நடத்தினார். ஆனால் அவர் எதிர்பார்த்த வகையில் தேர்தல் முடிவுகள் அமையவில்லை. தேர்தலில் அவரைத் தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேனவை புதிய ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்தார்கள். அதனையடுத்து நல்லாட்சி அரசு நாட்டில் மலர்ந்தது.

ஆனால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தமட்டில், அதன் பெயருக்கு ஏற்ற வகையில் அது நல்லாட்சியாக அமைய வில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசைப்போலவே, இராணுவத்தினர் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படமாட்டா. அவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத் தப்படமாட்டார்கள். அவ்வாறு அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று சிறிசேன அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

யுத்த மோதல்களின் போது என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிய வேண்டும். நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் உள்ளக விசாரணை பொறி முறையின் கீழ் பொறுப்புக் கூற வேண்டும். மூன்றாவதாக நிவாரணம் வழங்க வேண்டும். நான்காவதாக நாட்டில் மீண்டும் யுத்தப் பாதிப்புகள் ஏற் படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நான்கு செயற்பாடுகளை உள்ளடக்கியதாகவே 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங் கியது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

வெளிநாட்டு நீதிபதிகளுடன் உள்ளூர் நீதிபதிகளும் கலந்து இருந்து நீதி விசாரணை நடத்துகின்ற கலப்பு நீதி விசாரணைப் பொறிமுறையை எந்தவொரு கட்டத்திலும் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே கருத்தைத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எந்தக் காரணத்தைக் கொண்டும் இராணுவத்தினர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படமாட்டார்கள் என்ற தமது சூளுரைப்பின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

## அமைச்சர் ராஜிதவின் கூற்றும், மறுப்பும்

அரசின் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே போர்க் குற்றங்கள் என்று எதுவுமே நிகழவில்லை. ஆகவே நீதிவிசாரணை என்பது அவசியமில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளராகிய அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கின்றார்.

யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு காண வேண்டும் என்று தமிழ் மக்கள் மீது, அரசியல் ரீதியாக அனுதாபம் கொண்டவராகத் தோற்றம் காட்டிய அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் இருந்து இத்தகைய கருத்துக்கள் வரும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இதனால், அவருடைய இந்த கூற்று தமிழ் மக்களைக் கொதிப்படையச் செய்திருந்தது.

தமிழ் மக்களுடைய இந்த ஏமாற்ற உணர்வை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கூற்றுக்கு ஆட்சேபனையையும், கண்டனத்தையும் வெளியிட்டார்.

அவருடைய உரையின்போது குறுக்கிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, அவ்வாறு தான் கூறவில்லை என மறுத்துரைத்தார். தான் கூறாத தவற்றையே யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் திரித்து வெளியிட்டிருந்தன என்று அவர் சுட்டிக்காட்டிய போதிலும், அவருடைய மறுப்பு எடுபடவில்லை. அப்படியே அமுங்கிப் போனது.

இத்தகைய ஒரு பின்னணியில் தான் வாய்ப் பேச்சுகள் போதும் ஆக வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் சாளில் ஷெட்டி அரசுக்கு இடித்துரைத்திருக்கின்றார்.

காலத்தை இழுத்தடித்து, சாக்கு போக்குகளைக் கூறிக்கொண்டிருக்கும் அரசும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

உலக நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தையும் நீதி யையும் பெற்றுக் கொடுப்பதற்கும் அயராமல் உழைத்து வருகின்ற சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக் களை நேரடியாகச் சந்தித்து, அவர் களுக்கு ஆறுதல் கூறி, அவர் களுக்கான ஆதரவை வெளியிட்டதுடன் நின்று விடவில்லை.

அரசுக்கு நேரடியாக விடயங்களை எடுத்துக் கூறி அரசு தனது பொறுப்புக்களைநிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்திருக்கின்றது.

சர்வதேசத்தின் உதவியோடு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போவதாகவும், அதற்கான நகர்வுகளையே கூட்டமைப்பும் மேற்கொண்டிருப்பதாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலம் அரசியல் தீர்வு காணப்படும் என்ற பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும், சர்வதேச மன்னிப்புச் சபை அரசுக்குக் கூறியிருப்பதே பொருத்தமாக அமைந்துள்ளது. ★

காலைக்கதிர்



பொன்.வேணு கிருஷ்ணா




## சிரிய விஷவாயுத் தாக்குதல்

சிரியாவின் வடமேற்கு இட்லிப் மாகாணத்தில் நடந்த இரசாயனத் தாக்குதலுக்கு ஜனாதிபதி பஷர் அல்-அசாத் அரசாங்கத்திற்கு விசுவாசமான படைகள் தான் பொறுப்பாகின்றன என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு, ட்ரம்ப் நிர்வாகம் போரால் சீரழிந்த அந்த மத்திய கிழக்கு நாட்டில் ஒரு புதிய அமெரிக்கத் தலையீட்டைத் தீவிரப் படுத்தும் அச்சுறுத்தலைக் கொண்டு பகிரங்கமாக விடையிறுத்தார்.



வொஷிங்டனின் விருப்பமான அரபு கைப்பாவை ஆட்சியாளர்களில் ஒருவரான ஜோர்டான் நாட்டு அரசர் இரண்டாம் அப்துல்லாஹ் பக்கவாட்டில் நிற்க, வெள்ளை மாளிகையின் ஒரு கூட்டுச் செய்தியாளர் கூட்டத்தில் (**April** முதல் வாரம் 2017) ட்ரம்ப் பேசுகையில், ''அசாத் ஆட்சியின் இந்த கொடூரமான



நடவடிக்கைகளைச் சகித்துக் கொள்ள முடியாது, என்றும், ''என்னைப் பொறுத்த வரையில் பல்வேறு வரம்புகளைக் கடந்து விட்டன'' என்றும் அறிவித்தார். 2013 இல் இரசாயன ஆயுதத் தாக்குதல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களுக்காக சிரியா மீது இராணுவரீதியில் தலையிட அச்சுறுத்தியதோடு அதை நடத்த தவறியதற்காக ட்ரம்ப் அவருக்கு முன்பிருந்த பராக் ஒபாமாவைக் குறை கூறியதோடு, ''இப்போது எனக்கு பொறுப்பிருக்கிறது'', என்று அறிவித்தார், அத்துடன் ''சிரியா மற்றும் அசாத்தை நோக்கிய'' அவர் ''மனோபாவம் மிகவும் மாறியிருக்கிறது'' என்பதையும் சேர்த்துக் கொண்டார்.




**''ஐக்கிய நாடுகள் கூட்டாக செயல்படுவதற்கான அதன் கடமையிலிருந்து தொடர்ந்து தவறும் போது, அது நாங்கள் எமது சொந்த நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும் வாழ்க்கைக் காலமாக ஆகிவிடுகிறது.''**

இதற்கிடையே ஐக்கிய நாடுகளுக்கான வொஷிங்டன் தூதர் நிக்கி ஹேலி (**Nikki Haley**), சிரியாவிற்கு எதிரான தாக்குதலுக்கு ஒரு மூடிமறைப்பாக சேவையாற்றக் கூடிய மேற்கு-ஆதரவிலான ஓர் ஆத்திரமூட்டும் ஐ.நா. தீர்மானத்தை வீட்டோ அதிகாரம் கொண்டு ரஷ்யா தடுத்துவிடக்கூடும் என்று எதிர்பார்ப்பதால் அதற்கு முன்னதாகவே ஒருதலை யான அமெரிக்க இராணுவ நடவடிக்கை குறித்து இன்னும் அதிக நேரடியான அச்சுறுத்தலை வெளியிட்டார். ஐக்கிய நாடுகள் கூட்டாக செயல்படுவதற்கான அதன் கடமையிலிருந்து தொடர்ந்து தவறும் போது, அது நாங்கள் எமது சொந்த நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும் வாழ்க்கை காலமாக ஆகி விடுகிறது, என்றார்.

ஈராக் மீது படையெடுத்து அந்நாட்டையும் மற்றும் மத்திய கிழக்கின் பெரும்பகுதிகளையும் ஒரு மரண புதைகுழியாக மாற்றி பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், வொஷிங்டன் மீண்டும் ஏகாதிபத்திய தாக்குதலுக்கு குறிப்பிடத்தக்கவகையில் அதேபோன்றவொரு பாசாங்குதனத்தைப் பயன்படுத்தி வருகிறது.

நாஜி மூன்றாம் ரைஹ் தோல்விக்குப் பின்னர் வேறெந்த ஆட்சியை விடவும் அதிகளவில் அப்பாவி மக்கள் கொல்லப் படுவதற்கும் மற்றும் போர் குற்றங்கள் புரிவதற்கும் பொறுப்பான ஓர் அரசாங்கம், முதலை கண்ணீர் மற்றும் போலி தார்மீக ஆத்திரத்துடன், மீண்டுமொரு



முறை, ''பெரிய பேரழிவுகரமான ஆயுதங்களை'' ஓர் ஒடுக்கப்பட்ட முன்னாள் காலனித்துவ நாடு பயன்படுத்துவதாக குற்றச்சாட்டும் வார்த்தைகள், அமெரிக்க மற்றும் உலக மக்கள் மீது ஆதாரமற்ற வாதங்களுடன் குண்டுமழையென வீசப்படுகின்றன.

முடுக்கிவிடப்பட்டுள்ள இந்த பிரசாரத்தின் பாசாங்குத் தனத்தில், சிரியா தொடர்பான அமெரிக்க கொள்கையை மாற்றும் நோக்கில் மத்திய உளவுத் துறையும் (**CIA**) மற்றும் மேற்கு கூட்டு இரகசிய சேவைகளும் திட்டமிட்டு செயற்படுத்துகின்ற ஓர் ஏகாதிபத்திய ஆத்திரமூட்டலுக்கான சகல அறிகுறிகளும் உள்ளன.

**ஈராக் மற்றும் சிரியாவிற்கான இஸ்லாமிய அரசுடன் (ISIS) சண்டையிடுவதற்காக அசாத்தை பதவியிலிருந்து நீக்குவதில் ஒருங்குவியும் நிலைப்பாட்டிலிருந்து ட்ரம்ப் நிர்வாகம் கவனத்தை மாற்றிக் கொள்ள சமிக்ஞை செய்திருந்த நிலைமைகளின் கீழ், டமாஸ்கஸ் அதுபோன்றவொரு ஆத்திரமூட்டும் தாக்குதலை ஏன் நடத்தும்?**

முதலாவதாக, அதில் உள்நோக்கம் சம்பந்தமான கேள்வி உள்ளது. அதுபோன்றவொரு குற்றத்தில் யாருக்கு ஆதாயம்? தெளிவாக அசாத் ஆட்சிக்குக் கிடையாது, அது, ஆறு ஆண்டுகால இரத்தந்தோய்ந்த ஆட்சி மாற்றத்திற்கான போரில் சி.ஐ.ஏ மற்றும் வொஷிங்டனின் பிராந்திய கூட்டாளிகளால் ஆயுதமேந்த செய்யப்பட்டு, நிதியுதவி வழங்கப்பட்டு மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட இஸ்லாமிய ''கிளர்ச்சியாளர்களை'', ரஷ்யா மற்றும் ஈரான் உதவியோடு, பெரிதும் வென்றடக்கி உள்ளது. அந்த அரசாங்கம் இப்போது அந்த நாட்டின் பிரதான நகரங்கள் உட்பட அந்நாட்டின் 80 சதவீதத்தை ஆட்சி செய்து வருகிறது, இஸ்லாமியவாதிகளின் பிடி பெரும்பாலும் இட்லிப் மாகாணத்தின் புறநகர்ப் பகுதிகளுக்குள் குறைக்கப்பட்டுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவிற்கான இஸ்லாமிய அரசுடன்



(**ISIS**) சண்டையிடுவதற்காக அசாத்தை பதவியிலிருந்து நீக்குவதில் ஒருங்குவியும் நிலைப்பாட்டிலிருந்து ட்ரம்ப் நிர்வாகம் கவனத்தை மாற்றிக் கொள்ள சமிக்ஞை செய்திருந்த நிலைமைகளின் கீழ், டமாஸ்கஸ் அதுபோன்றவொரு ஆத்திரமூட்டும் தாக்குதலை ஏன் நடத்தும்?

ஆனால் சிஐஏ ஆதரவிலான ''கிளர்ச்சியாளர்கள்'' தான் - அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுத்துறை எந்திரத்தில் உள்ள அவர்களது ஆதரவாளர்களோடு சேர்ந்து - சிரியா எங்கிலும் அசாத் அரசாங்கம் அதன் ஆட்சியை ஒன்றுதிரட்டுவதைத் தடுப்பதற்கு ஒரு வழிவகையாக அதுபோன்றவொரு ஆத்திரமூட்டலை நடத்துவதில் எல்லா நலன்களையும் கொண்டுள்ளனர். அனைத்திற்கும் மேலாக, ஐக்கிய நாடுகள் சபையின் இரசாயன ஆயுத(கூறை)ப்பு முகமையின் விசாரணை உட்பட பல்வேறு விசாரணைகள், சிரிய அல் குவைதாவுடன் இணைப்புக் கொண்ட அல் நுஸ்ரா முன்னணியைச் சேர்ந்த இந்த சக்தி



கள்தான் குளோரின் மற்றும் சரின் விஷவாயுக்களைப் பயன்படுத்தி இதேபோன்ற தாக்குதல்களை நடத்தி இருப்பதாகத் தெளிவுபடுத்தி உள்ளன, இத்தகைய விஷவாயுக்களை இவை அவர்களது பிராந்திய ஆதரவாளர்களான சவூதி அரேபியா, கட்டார் மற்றும் துருக்கியிடம் இருந்து பெற்றுள்ளனர் மற்றும் அவற்றை உற்பத்தி செய்யும் தகைமை அவர்களுக்கு இருப்பதை அவர்களே நிரூபித்துள்ளனர்.

**இந்த இரசாயனத் தாக்குதல் ஆட்சி மாற்றத்திற்கான புதுப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் மற்றும் அசாத்தை வெளியேற்றுவது இனியும் முன்னுரிமையில் இல்லை என்று அறிவுறுத்துவதற்காக, ட்ரம்ப் நிர்வாகம் மீது விமர்சனங்களை வைக்கவும் களம் அமைத்துள்ளது.**



அடுத்தது இத்தாக்குதல் நடத்தப் பட்டிருக்கும் காலகட்டம் குறித்ததாகும். செவ்வாயன்று (**April** முதல் வாரம் 2017) அதிகாலை நடந்துள்ள குற்றஞ் சாட்டப்படும் இந்த விஷவாயு தாக்குதல், புரூசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ''சிரியா மற் றும் அப்பிராந்தியத்தின் எதிர்காலத்திற்கு ஆதரவான மாநாடு'' என்பது தொடங்க இருந்ததோடு பொருந்தி உள்ளது, இம்மாநாடு சீரழிக்கப்பட்ட அந்நாட்டை சாத்தியமான அளவிற்கு ஆதாயத்தோடு மறுகட்டுமானம் செய்வதில் ஐரோப்பாவின் தலையீட்டுடன் சேர்ந்து சிரியாவில் ''அரசியல் மாற்றத்திற்கான'' முன்மொழிவுகளை மீளாய்வு செய்ய இருந்தது. குற்றஞ்சாட்டப்படும் இந்த இரசாயன தாக்குதல் ஆட்சி மாற்றத்திற்கான புதுப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் மற்றும் அசாத்தை வெளியேற்றுவது இனியும் முன்னுரிமையில் இல்லை என்று அறிவுறுத்துவதற்காக ட்ரம்ப் நிர்வாகம் மீது விமர்சனங்களை வைக்கவும் களம் அமைத்துள்ளது.

இதில் ஒருவிதமான வடிவம் உள்ளது. கடந்த முறை வொஷிங்டனும் அதன் கூட்டாளிகளும் ஒரு மிகப்பெரிய இரசாயன ஆயுதத் தாக்குதலுக்காக அசாத் ஆட்சியைக் குறைகூறி, அந்த பாசாங்குத்தனத்தின் மீது ஒகஸ்ட் 2013 இல் ஒரு முழு அளவிலான போரைத் தொடங்குவதற்கு அருகில் சென்றிருந்தன. குற்றஞ்சாட்டப்பட்ட அந்த தாக்குதல் குறித்து அதற்கு பின்னர் வெளியான தகவல்கள் துருக்கிய உளவுத்துறையின் உதவியோடு ''கிளர்ச்சியாளர்களது'' ஓர் ஆத்திரமூட்டல் என்பதை அம்பலப்படுத்தின, அது ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத விசாரணையாளர்கள் டமாஸ்கஸிற்கு வந்த அதே நாள் நடந்திருந்தது.

எவ்வாறிருப்பினும் இந்த ஒட்டு மொத்த விவகாரமும் கூறும் அதிகப்படியான அம்சம் என்னவென்றால் இந்த சம்பவம் குறித்த அடிப்படை உண்மைகள் கூட தெரிய வராமல், தீவிர விசாரணைகள் மிகக் குறைந்தளவே நடந்துள்ள நிலையிலேயே, ஒட்டுமொத்த பெரு நிறுவன ஊடகமும் அசாதாரணமான விதத்தில் இராணுவ நடவடிக்கைக்கான ஒரு முழு அளவிலான பிரசாரத்தில் ஒருங்கிணைந்துள்ளன. சிரியாவில் நடந்த இந்தக் குற்றகரமான சம்பவம் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே, பிரதான பத்திரிகை ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் அத்துடன் தொலைகாட்சி செய்தி விமர்சகர்களும் இதையொரு விவாதப்பொருளாக பெற்று விட்டதாக தெரிகிறது.

நிச்சயமாக அவர்களில் யாருமே பெருமதிப்பார்ந்து அவர்கள் பெற்ற தகவல்களின் ஆதாரங்களில் அமெரிக்க உளவுத்துறை மற்றும் போருக்கு அழுத்தமளிக்கும் இராணுவ அதிகாரிகளோடு சேர்ந்து அல் குவைதா தொடர்புபட்ட சிரியாவில் உள்ள ''நடவடிக்கையாளர்கள்'' உள்ளடங்கி இருப்பதை தங் களின் வாசகர்களுக்கும் நேயர்களுக்கும் தகவல் அளிக்க கருதவில்லை.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




120

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *முல்லைத்தீவுச் சமர்*

சூரியக் கதிர் (ரிவி ரச) என்ற குறியீட்டுப் பெயருடன், பிரமாண்டமான அளவில் ஒரு படையெடுப்பை நிகழ்த்தி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமப் பிரதேசத்தைக் கைப்பற்றிய போது சிங்கள இராணுவத்துக்கு மிகவும் தலைகுனிவான பெரிய ஏமாற்றமே காத்திருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மண்ணிலும் அதன் தலைநகரான யாழ்ப்பாணத்திலும் பொது சனங்கள் எவருமே இருக்கவில்லை. சன சஞ்சாரமற்ற ஒரு பேய் நகரத்தையும் வெறிச்சோடிய கிராமங்களையும் கொண்ட ஒரு சூன்யப் பிரதேசத்தையே சிங்கள இராணுவம் கைப்பற்ற முடிந்தது. விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலுக்குச் செவி சாய்த்து, வலிகாமத்தின் ஒட்டுமொத்தச் சனத்தொகையான ஐந்து லட்சம் மக்களும் தென்மராட்சிக்குப் புலம் பெயர்ந்தனர். ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் பேரவலங்களை அனுபவித்தவாறு வலிகாம மக்கள் சன சமுத்திரமாக இடம்பெயர்ந்து செல்வார்களெனச் சந்திரிகாவின் அரசும் அவரது ஆக்கிரமிப்புப் படைகளும் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யும் நோக்குடனேயே யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பு நடைபெறுவதாக உலகடங்கிலும் சிறிலங்கா அரசு பரப்புரை செய்தது. ஆனால், யாழ்ப்பாண நகரவாசிகள் உட்பட வலிகாமத்தின் ஒட்டு மொத்தமான சனத்தொகையும் சிங்கள ஆக்கிரமிப்பாளரின் பிடிக்குள் சிக்க விரும்பாது விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தது. சிங்களப் பேரினவாதிகளைத் தலைகுனிய வைத்தது.

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் அடுத்ததாகத் தென்மராட்சி மீது படையெடுப்பை நிகழ்த்தும் என்பது விடுதலைப் புலிகளின் தலைமைக்கு நன்கு தெரியும். சிங்கள இராணுவத்துடன் தென்மராட்சியில் மோதுவதைத் தலைவர் பிரபாகரன் விரும்பவில்லை. அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள பெருந்திரளான மக்களுக்கு அது பேராபத்தாக முடியும். அத்துடன், பிரபாகரனுக்குத் தூர நோக்குடைய எதிர்காலப் போரியல் திட்டங்களும் இருந்தன. வன்னியை மையத் தளமாகக் கொண்டே எதிர்காலச் சுதந்திரப் போர் அமைய வேண்டுமெனக் கருதிய அவர், தந்திரோபாயப் பின்வாங்கலாகத் தனது படையணிகளை வன்னி நோக்கி நகர்த்தினார்.

வன்னி மாநிலம் தனக்கே உரித்தான சிறப்புமிகு வரலாற்றைக் கொண்டது. வணங்கா முடிகளான வன்னி மன்னர்கள் ஆட்சி புரிந்த வீர மண் அது. வளமான நிலங்களும், நீர் தேங்கும் குளங்களும், அடர்ந்த பெரும் காடுகளும் நிறைந்த வன்னி நாடு வடதமிழீழத்தின் இதய பூமியாக விளங்கி வருகிறது. பிரபாகரனின் தலைமையில் புலிப் படை வீரர்கள் பயின்று வளர்ந்த மண்ணும் இது தான். உலகத்தின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றை விடுதலைப் புலிகள் எதிர்த்து நின்று வென்றதும் இங்குதான். காட்டுப் புறக் கெரில்லாப் போருக்கும் சரி, மரபு வழிப் பெரும் சமர்களுக்கும் சரி, இந்த மண், தமிழரின் விடுதலைப் போருக்கு உகந்த மண் என்பது பிரபாகரனுக்கு நன்கு தெரியும். புவியியல் அமைப்பைப் பொறுத்தவரை, யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தென் தமிழீழப் பிரதேசத்தையும் விட, தரை வழிப் போருக்குத் தகுந்த இடம் வன்னி என்பதை அவர் நன்கறிவார். ஆகவேதான், வன்னி மாநிலத்தில் நிலைகொண்டு நின்று, அந்த நிலத்தைப் பாதுகாத்து, அங்கு மையமான ஒரு பெரும் தளத்தைக் கட்டி எழுப்பத் திட்டமிட்டார் பிரபாகரன்.





1995 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் வன்னிக்கு இடம் மாறியதிலிருந்து, தனது படைத்துறையைப் பலப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் இயக்கம் மும்முரமாகச் செயற்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பு யாழ்ப்பாணச் சமரில் தோல்வியடைந்து சிதைந்து விட்டது எனச் சந்திரிகா அரசு பரப்புரை செய்து வந்தவேளையில், வன்னியில் பலம் பொருந்திய ஒரு தேசிய விடுதலை இராணுவத்தைக் கட்டி எழுப்பும் பணியில் வெகு தீவிரமாக உழைத்து வந்தார் பிரபாகரன். இந்தக் குறிக்கோளை அடைவதற்குப் பரந்த அளவில் ஆட்சேர்ப்பும் நடைபெற்றது. புதிய படையணிகளை நிறுவி, அவற்றை விரிவுபடுத்தியதோடு, போர்ப் பயிற்சித் திட்டங்களும் மும்முரமாக முடுக்கி விடப்பட்டன. 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வன்னியிலுள்ள ஒரு பெரும் சிங்களப் படைத்தளம் மீது தாக்குதலை நடத்துவதற்குப் பிரபாகரன் திட்டமிட்டார்.

அப்பொழுது நானும் எனது மனைவி அடேலும் கிளிநொச்சியிலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள இராமநாதபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்தோம். ஜூலை மாதம் நடுப்பகுதியில் ஒரு நாள், அதிகாலையில் எனது வீட்டுக்கு வருகை தந்தார் பிரபாகரன். அவர் மிகவும் களைத்துப் போய் இருப்பதையும் அவரது கண்கள் சிவந்து இருப்பதையும் அவதானித்தேன். தூக்கமற்ற பல இரவுகளைத் தனது தளபதிகளுடன் கழித்து வருகிறார் என அவர் சொன்னார். பெரியதொரு வலிந்து தாக்கும் போர் நடவடிக்கையைத் திட்டமிட்டு, அதனைச் செயற்படுத்தும் நுணுக்கங்கள் பற்றித் தளபதிகளுக்கு விளங்கப் படுத்தி வருகிறார் எனவும் சொன்னார். வழமையாகவே தாக்குதல் விவரங்கள் பற்றி நான் அவரிடம் கேட்டறிந்து கொள்வதில்லை. தாக்குதல் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் முழு விவரங்களுடனும் பிரபாகரன் என்னிடம் வருவார். தாக்குதல் சம்பவங்களைப் பத்திரிகை அறிக்கையாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரிப்பது என்னுடைய பொறுப்பாக இருந்தது. எந்த இராணுவ முகாம், எப்பொழுது தாக்குதலுக்கு ஆளாகப் போகின்றது என அவர் சொல்லவுமில்லை. நான் கேட்கவுமில்லை. நடைபெறவிருக்கும் தாக்குதல் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று மட்டும் சொன்னார். ஆயினும், முல்லைத் தீவுப் பெரும் தளமே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகப் போகின்றது என்பதை வேறு வழிகளில் அறிந்து கொண்டேன்.

வேவு நடவடிக்கையின் மூலம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில்தான் எதிரியின் இராணுவ இலக்கு ஒன்று மீது தாக்குதல் திட்டத்தைப் பிரபாகரன் வகுப்பது வழக்கம். ''ஆழம் தெரியாது காலை வைக்கக் கூடாது'' என்ற பழமொழிக்கு ஒப்ப எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்தே தாக்குதலில் இறங்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் கண்டிப்பாக இருந்தார். இதனால், வேவு நடவடிக்கைகளுக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு படைத் தளத்தின் புவியியற் கட்டமைப்பு, பாதுகாப்பு வேலிகள், காவலரண்கள், கண்ணிவெடிப் பகுதிகள், படைத்தளத் தின் உட்கட்டமைப்பு, எதிரியின் ஆள் பலம், ஆயுத பலம், பீரங்கி, மோட்டார்த் தளங்கள் – இப்படியாகச் சகல தகவல்களையும் பெற்றதன் பின்னரே தாக்குதல் திட்டத்தை நெறிப்படுத்துவார் பிரபாகரன். முல்லைத்தீவுப் பெரும் தளம் மீது கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரை வேவு பார்க்கப்பட்டது. ஆபத்துகள் நிறைந்த இந்த வேவு நடவடிக்கைக்கு கேணல் தீபன் பொறுப்பாக இருந்தார். அச்சொட்டான வேவுத் தகவல்களின் அடிப்படையில் மிகவும் நுட்பமாக நெறிப்படுத்தப்பட்ட தாக்குதல் திட்டத்தைத் தயாரித்து முடித்தார் பிரபாகரன். விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய முல்லைத்தீவுச் சமருக்கான நாளும் குறிக்கப்பட்டது.

முல்லைத்தீவுப் படைத்தளம் எட்டு சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. கடலோரம் அமையப் பெற்றிருந்த முல்லைத்தீவு நகரையும் அதன் சுற்றுப் புறக் கிராமங்களையும் உள்ளடக்கியதாக விஸ்தரிக்கப்பட்டிருந்த இந்தப் பெரும் படைத்தளம் மிகவும் இறுக்கமான பாதுகாப்பைக் கொண்டிருந்தது. இயற்கைச் சூழலும் படைத் தளத்தின் பாதுகாப்புக்கு வலுச்சேர்த்தது. ஒருபுறம் இந்துமாகடல். மறுபுறம் நந்திக் கடல். இன்னொரு புறத்தில் வட்டுவாகல் ஆறு. இந்த விதம் கடலும், நீரேரியும், ஆறுமாக மூன்றுபுறமும் இயற்கையின் பாதுகாப்பும், ஒரு புறம் மட்டும் தரையுமாக இந்தப் படை முகாம் அமையப் பெற்றிருந்தது. முகாமின் வெளிப் பாதுகாப்பு வேலி பத்துக் கிலோ மீற்றர் சுற்றளவைக் கொண்டது. அந்தப் பாதுகாப்பு வேலி உறுதியான காவல் அரண்களாலும் கண்ணிவெடித் திடல்களாலும் பலம் பெற்று இருந்தது. வெளிப் பாதுகாப்பு வலயத்தின் மையப் பகுதியில், கடலோரமாக, மூன்று கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்ட உட்பாதுகாப்பு வலயம் ஒன்றும் அமையப் பெற்றிருந்தது. இது இரும்புக் கோட்டை போன்ற அதிஉயர் பாதுகாப்பைக் கொண்டது. தாக்குதல் நிகழ்ந்த அன்றையதினம், இரண்டு 'பற்றாலியன்' (Battalion) படையினரும் பீரங்கிகளும், மோட்டார் அணிகளுமாக மொத்தம் ஆயிரத்து அறுநூறு (1600) துருப்புகள் படை முகாமில் இருந்தன.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் நாள் அதிகாலை முல்லைத்தீவுப் பெரும் தளம் மீதான தாக்குதல் ஆரம்பமானது. மிக உக்கிரமானதாக வெடித்த இந்தப் பெரும் சமரில், இரு தரப்புச் சுடுகலன்களின் வெடிச் சக்தியால் முல்லைத்தீவுப் பிரதேசமே அதிர்ந்து கொண்டிருந்தது. சண்டை தொடங் கிய சில மணி நேரத்துக்குள் எட்டு முனைகளில் வெளிப் பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு புலிப் படை அணிகள் முகாமுக்குள நுழைந்தன. கடலோரமான இரு முனைகளில் காவலரண் வரிசையை உடைத்தெறியும் பிரபாகரனின் புதுமையான அதிரடித் தாக்குதல் திட்டம் கடற்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மயிர்க் கூச்செறியும் இந்த வீரச் சாதனையை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தனர் கடற்புலிகள்.

முல்லைத்தீவுப் படைத்தளத்துக்குப் பேராபத்து எழுந்துள்ளது என்பதை அறிந்ததும், வெற்றிலைக் கேணியிலிருந்தும் பின்பு திருகோணமலையிலிருந்தும் சிறிலங்கா கடற்படை அணிகள் பொருது களத்துக்கு விரைந்தன. 'பராக்கிரம' என்ற தலைமைப் போர்க் கப்பலுடன், ஏழு 'டோரா' அதி வேகச் சண்டைப் படகுகள், இரண்டு தரையிறங்கு கலங்கள் உட்பட மொத்தம் பதினைந்துக்கும் மேற்பட்ட கடற் கலங்களைக் கடற்படை களத்துக்கு அனுப்பிவைத்தது. கடல் வழியான உதவிகளையும் தரையிறக்கத்தையும் தடுத்து நிறுத்தவும் பிரபாகரன் திட்டம் வரைந்திருந்தார். இதன்படி, கரையிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவிலும், ஐந்து கிலோமீற்றர் அகலத்திலுமாக வியூகம் வகுத்து, அந்தக் கடற்பரப்பில் கடற்புலிக் கலங்கள் சுற்றுக் காவலில் விடப்பட்டிருந்தன. இதனால் கடற்புலிகளின் பாதுகாப்பு வலயத்தை உடைத்து, உதவிப் படைகளை தரையிறக்கச் சிங்களக் கடற்படையினர் மேற்கொண்ட பகீரத முயற்சிகள் பலனளிக்கவில்லை. குண்டு வீச்சு விமானங்கள், போர் உலங்குவானூர்திகளின் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து, கடற்படையின் பீரங்கிப் படகுகளுடன் போராடி, கடல் வழியாகத் துருப்புகளைத் தரையிறக்கும் முயற்சிகளை முறியடித்தனர் கடற்புலிகள்.

(தொடரும்...)

காலைக்கதிர்


# 58 ஆவது நாளாக கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி, ஏப்.19
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்தும் 58 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லாட்சி அரசு ஆட்சியமைத்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் தங்களது உறவுகள் தொடர்பில் இது வரை எந்த பதில்களையும் தரவில்லை.

தங்களது உறவுகளைத் தடுத்து வைத்துள்ள மறைமுக தடுப்பு முகாம்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

தங்களது உறவுகள் தொடர்பில் உரிய பதிலை வழங்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 28 ஆவது நாளாக பன்னங்கண்டியில் கவனவீர்ப்பு



கிளிநொச்சி கரைச்சி பன்னங்கண்டிப் பகுதியில் 28 ஆவது நாளாக நேற்றுக் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் இரணைமடு குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப் படும் போது பயிர் செய்கைக்கென தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்ட சரஸ்வதி கமம் பகுதியில் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் காணிகளற்ற 120 வரையான குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன.

இந்த நிலையில் மீள்குடியமர்வின் பின்னர் காணி உரிமம் இன்மையால் இவர்களுக்கான வீட்டுத்திட்ட வசதிகள் உள்ளிட்ட எதனையும் வழங்க முடியாத நிலையில் இருந்து வருவதால் மக்களின் கோரிக்கைகளை அரச அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மீதொட்டமுல்ல அனர்த்தத்துக்கு அனுதாபம் தெரிவித்தது வியட்நாம்

கொழும்பு, ஏப்.19
மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் இலங்கை மக்கள் மற்றும் அரசுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர் என்று வியட்நாம் சோசலிச ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி றென் டை குவான், வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் குயன் பூ ரோன்ங் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வியட்நாமுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், இந்த கவலைக்குரிய சந்தர்ப்பத்தில் வியட்நாம் மக்களும் அரசும் இலங்கையுடன் ஒன்றிணைந்துள்ளன என்று வியட்நாம் ஜனாதிபதியும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வாறான அனர்த்தம் எதிர்காலத்தில் இடம்பெறாது இருப்பதற்காகத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும்போது ஏதேனும் தேவைகள் இருப்பின் அவற்றை வழங்குவதற்குத் தாம் தயாராக இருக்கிறோம் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து தெரிவிக்கையில்-

அனுதாபம் தெரிவித்தமைக்கும் தேவையான உதவியை வழங்குவதற்கு முன்வந்தமைக்கும் இலங்கை மக்கள் சார்பில் தாம் நன்றி தெரிவிக்கிறோம் எனக் குறிப்பிட்டார். (ஐ)

# சட்டவிரோத சிகரெட்: வெளிநாட்டுப் பிரஜை பொலிஸாரால் கைது


கொழும்பு, ஏப்.19
சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் வெலிகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய வெலிகம - பெலென கடற்பகுதியில் வைத்து இவர் கைதாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் வசம் இருந்து தலா 20 சிகரெட்டுக்கள் அடங்கிய 1 பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் உக்ரைன் பிரஜை எனத் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஒளிப்பதிவாளர் காலமானார்



கொழும்பு, ஏப்.19
ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஒளிப்பதிவாளர் உதேனி ஜயவர்தன காலமானார்.

கடுமையான சுகவீனம் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார். உதேனி ஜயவர்தன, 1998 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவில் ஒளிப்பதிவாளராக இணைந்தார்.

இவர் நாட்டில் உள்ள மூத்த ஒளிப்பதிவாளர்களில் பிரசித்தி பெற்ற ஒருவராவார்.

இதேவேளை, உதேனி ஜயவர்தனவின் உடல், இன்று முற்பகல் 10 மணிமுதல் 5.30 மணிவரை பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் என்றும், அவரின் இறுதிக் கிரியைகள் பொரளை கனத்தையில் மாலை 6 மணிக்கு இடம்பெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# மாதர் கிராம அபிவிருத்தி சங்க மகளிர் தினம் கைதடி மேற்கில்





யாழ்ப்பாணம், ஏப்.19
கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர்தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.பஞ்சராஜா, இலங்கை வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் திருமதி த.சங்கீதா ஆகியோரும்-

கௌரவ விருந்தினர்களாக கைதடி மேற்கு கிராம அலுவலர் கே.சதீசன், கைதடி மு.ம.க. முதல்வர் செ.பேரின்பநாதன், கைதடி மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் நா.சிவதிருச்செந்தூர்நாதர், தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் இ.கந்தசாமி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் கௌரவித்து அழைத்துவரப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றதைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், தேவாரம், மௌன அஞ்சலி என்பன நடைபெற்றன. தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்று மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் உரை இடம்பெற்றது. தொடர்ந்து நல்லின மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (ஐ)

# பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் காமராஜ் தலைமையில் இந்தப் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் கழக அங்கத்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் குருதி சர்க்கரைப் பரிசோதனைகளுக்கு கட்டணம் அறவிடுதல் இடைநிறுத்தம்!

தெல்லிப்பழை, ஏப்.19

தெல்லிப்பழை ஆதார வைத்தியாசலை வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் நோயாளர்களின் குருதி சர்க்கரைப் பரிசோதனைகளுக்குக் கட்டணம் அறவிடும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் யோ.திவாகர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வைத்தியசாலை அத்தியட்சகர் செய்திக் குறிப்பு ஒன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான குருதியில் சர்க்கரை அளவிடும் பட்டிகள் (Strips) யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டு வந்தமையால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு மாத்திரமே இலவச சர்க்கரைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வெளிநோயாளர்கள் மற்றும் கிளினிக் நோயாளர்களுக்கான சர்க்கரைப் பரிசோதனைகள் வைத்தியசாலையின் சொந்த முயற்சியின்பேரில் கட்டண அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதனால் வறிய நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்ட போதும் விநியோகம் அதிகரிக்கப்படவில்லை. எனினும், கடந்த வாரத்திலிருந்து கட்டணம் அறவிடும் முறையை இடைநிறுத்தியுள்ளதோடு, எமக்குத் தேவையான மேலதிக பட்டிகளை (Strips) வழங்குமாறு யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் போதுமான அளவு பட்டிகளைத் தொடர்ச்சியாக வழங்குமிடத்து எம்மால் இலவச பரிசோதனைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அத்துடன்,அரசால் வழங்கப்படும், குருதியில் சர்க்கரை அளவிடும் கருவிகளுக்கு (Glucometers) பல்வேறு பிரிவுகளில் காணப்பட்ட தட்டுப்பாடும், வனிக்கா சேர்ஜிக்கல்ஸ் நிறுவனத்தினரின் நன்கொடை மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது.

(இ)

## பேராதனை தாவரவியல் பூங்காவில் பெப்ரவரியில் ரூ.8 கோடி வருவாய்

கொழும்பு, ஏப்.19

பேராதனை தாவரவியல் பூங்காவில் பெப்ரவரி மாதத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் மூலம் சுமார் 8 கோடி ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் பெப்ரவரி மாதத்தில் மட்டும் 93 ஆயிரத்து 620 பேர் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலம்42 இலட்சம் ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

இதே காலப் பகுதியில் 52 ஆயிரத்து 131 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இங்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் மூலம் வருமானம் 76.3 மில்லியன் ரூபா வருமானமாக பெறப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# புத்தாண்டு போக்குவரத்தில் 72 கோடி ரூபா வருமானம்

### இலங்கை போக்குவரத்துச் சபை சாதனை

கொழும்பு, ஏப்.19

புத்தாண்டு காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை சாதனை வருமானத்தை ஈட்டியுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான கட்டுப்பாட்டு முகாமையாளர் பீ.எச்.ஆர்.ரீ. சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னைய ஆண்டுகளை விடவும் இந்த ஆண்டு புத்தாண்டு காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை கூடுதல் வருமானம் ஈட்டியுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி முற்பகல் வரையிலான காலப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 72 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

6 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 5 ஆயிரத்து 600 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இக் காலப் பகுதியில் தேசிய ரீதியில் 12 பிரதேசங்களில் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

கடந்த 8 ஆம் திகதி மட்டும் 8 கோடி 64 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

ஊவா, வடமேல், சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் கூடுதல் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் புத்தாண்டு காலத்துக்கான விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.(ஐ)

### ரக்பி வீரர் கொலைச் சம்பவம்;

# முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜியின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஏப்.19

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மாஅதிபர்அனுர சேனாநாயக்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில்வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பிரபல ரக்பி விளையாட்டு வீரர்வசீம்தாஜுதீனின்கொலைச் சம்பவம் தொடர்பில் சாட்சியங்களை மறைத்த குற்றத்துக்காக, அனுர சேனாநாயக்க கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, கொழும்பு மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கருத்துப் பகிர்வுறவாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகர விருந்தினர் விடுதியில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் நலிவடைந்து வரும் தமிழ்த் தேசிய வாதத்தை நிலை நிறுத்த வேண்டிய தார்மீகக் கடமையிலிருந்து தலைமைகள் நிலை தவறுவதாக எழும் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த செயற்பாட்டை மையப்படுத்தி அரசியல் தலைமைகள், மதகுருமார்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தடுமாறும் தமிழ்த் தலைமைகளால் தளர்வடைகிறார்களா தமிழ் மக்கள்? அடுத்தது என்ன? எனும் கருத்தியல் கோட்பாட்டில் ஆரோக்கியமான முன்நகர்வை ஏற்படுத்தும் நோக்கில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வில் தார்மீக உரிமையுடன் பங்கேற்று நிறைநிலை கருத்துப் பகிருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கலந்து கொள்ள விரும்புவோர் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் 077 8355464 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## தந்தை செல்வா நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப்.19

தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பொது நூலகம் அருகே உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

தந்தை செல்வா நற்பணி மன்றத் தலைவர் பேராயர் கலாநிதி ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அமைப்புக்குழுவின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்ரம ரட்ண கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றுவார்.

(ஐ)

## டெங்குக்கான புதிய மருந்து இலங்கைக்குப் பொருத்தமா?

### ஆலோசனை பெற சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஏப்.19

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள டெங்குக் காய்ச்சலுக்கான புதிய மருந்து இலங்கைக்கு பொருத்தமானதா என்பது தொடர்பில் வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக விசேட வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்திய நிபுணர்களின் பரிந்துரைகளை ஆராய்ந்த பின்னர் அந்த மருந்தை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(ஐ)

# மத்திய கிழக்கில் இருந்து திரும்புவோர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஏப்.19

மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிக்காகச் சென்று நாடு திரும்பும் பெண்கள் பிறர் வழங்கும் பொருள்களைக் கொண்டுவருவது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து பணிப் பெண்களுக்கு தெளிவுபடுத்த வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

10 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களுடன், குவைத்தில் இருந்து நாடு திரும்பிய பணிப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

கேகாலை பகுதியைச் சேர்ந்த இவர் சிகரெட் பற்றிய விவரங்களை அறிந்திருக்கவில்லை. குவைத்திலுள்ள தரகர் ஒருவர் போலியான விவரங்களை வழங்கி அதனை அவரிடம் அனுப்பி வைத்துள்ளார் என்று தெரியவந்துள்ளது என்றும் பராக்கிரம பஸ்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நாடு திரும்பும் வேளை பிறரிடம் இருந்து பொதிகளை எடுத்து வருவது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

(ஐ)

### 'பிளாஸ்ரிக்' பாவனையைக் கட்டுப்படுத்தல்;

## சாவகச்சேரியில் வெள்ளியன்று விழிப்புணர்வுப் பேரணி

சாவகச்சேரி, ஏப்.19

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் 'பிளாஸ்ரிக்' பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணி நுணாவில் பொது நூலகத்தில் ஆரம்பித்து ஏ9 வீதி வழியாக சாவகச்சேரி பஸ் நிலையத்தை அடையவுள்ளது என நகரசபையின் செயலாளர் கா. சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

பேரணியின்போது ஏ9 சாலையோரங்களில் காணப்படும் பாவனைக்குதவாத பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் தகரங்கள், பழையரயர்கள் போன்றவை அப்புறப்படுத்தப்படும். மேலும் அன்றைய தினம் நுணாவில் மத்தி, நுணாவில் கிழக்கு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் 'தமது குடியிருப்புக்களில் காணப்படும் பாவனைக்குதவாத பொருள்களை உரைப்பைகளில் இட்டு வீதியோரத்தில் வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(ச)

# சபரிமலையில் இளம் பெண்கள் தரிசனம்: விசாரணை நடத்தக் கேரள அரசு உத்தரவு!

## சமூக வலைத்தளத்தில் வெளியான புகைப்படத்தால் சர்ச்சை



சபரிமலை ஐயப்பன் கோயிலில் இளம் பெண்கள் சிலர் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளன. இது திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியத்தையும், கேரள அரசையும் அதிர்ச்சி அடையவைத்துள்ளது. இதையடுத்து, கேரள அரசு இது தொடர்பாக விசாரணை நடத்தி அந்த புகைப்படங்களின் உண்மைத் தன்மையை வெளிக் கொண்டுவருமாறு தேவஸ்வம், லஞ்ச ஒழிப்புதுறைக்கு உத்தரவிட்டுள்ளது.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைகளுக்காக நாடு முழுவதும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் இருமுடி சுமந்து, கடும் விரதம் இருந்து, புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். சபரிமலை ஐயப்பன் நைஷ்டிக பிரம்மச்சரிய தவத்தில் அமர்ந்திருக்கின்றமையால் 10 முதல் 50 வயது வரை உள்ள பெண்கள் தரிசனத்துக்காக அனுமதிக்கப்படுவதில்லை.

இது தொடர்பில் தேவஸ்வம் வாரிய அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

சுகொல்லம் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு சபரிமலையில் விசேட தரிசனம் செய்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. அதைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வயதுவரை தடை செய்யப்பட்ட பெண்கள் சிலரைத் தன்னுடன் அழைத்துச் சென்று அவர் தரிசனம் செய்தார் என முறைப்பாடுகள் வந்துள்ளன. பிரமுகர் தரிசனம் என்ற பெயரில் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதியை தவறாகப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

# எச்.ஐ.வி. கிருமியை அழிக்கும் மூலிகை மருந்து கண்டுபிடிப்பு!

## ஆராய்ச்சியாளர் மாதேஸ்வரன் தெரிவிப்பு

எயிட்ஸ் நோய்க்கு காரணமான 'எச்.ஐ.வி' கிருமியை அழிக்கும் மூலிகை மருந்தைத் தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மூலிகை ஆராய்ச்சியாளர் எஸ்.மாதேஸ்வரன் கண்டுபிடித்துள்ளார்.

இது தொடர்பில் பெங்களூர் பத்திரிகையாளர் மன்றத்தில் எஸ். மாதேஸ்வரன் தெரிவிக்கையில்:-

2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடத்திய ஆராய்ச்சியில், அஸ்வகந்தா மற்றும் வல்லாரை மூலிகைகளின் உதவியுடன் எச்.ஐவி. கிருமிகளைக் கொல்லும் சித்த மருத்துவத்தைக் கண்டறிய முடிந்தது.

ஈரோட்டில் உள்ள பெருந்துறை மருத்துவக் கல்லூரி, மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியனவற்றில் ஆராய்ச்சி செய்து இந்த மூலிகை மருந்து எச்.ஐ.வி.கிருமிகளை அழிக்கும் என்பதை நிரூபித்துள்ளோம். இந்த மருந்தை 3 பேருக்கு 3 மாதங்கள் கொடுத்து எனது ஆராய்ச்சி முடிவுகளை உறுதிப்படுத்தியுள்ளேன். இந்த மூலிகை மருந்தை 3 மாதங்கள் உட்கொண்டால் எச்.ஐ.வி. கிருமிகள் அழிக்கப்படும். இந்த மருந்தின் விலை மாதத்துக்கு 100 ரூபா மட்டுமே.

இதேவேளை, நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் மூலிகை மருந்தையும் தயாரித்திருக்கிறேன். எனது மருந்துகளைத் தயாரித்து சந்தையில் விடுவதற்கு பிரதமர் மோடியின் உதவியை நாடினேன். அவரது வழி காட்டுதலில் சென்னையில் உள்ள தேசிய சித்தாமையத்திலும் எனது மருந்துகள் சோதித்தறிந்து சான்றளித்துள்ளனர். - என்றார். (ச)

# சசிகலா குடும்பம் அ.தி.மு.கவில் இருக்கும்வரை இரு அணிகள் இணைப்புக்கு சாத்தியமே இல்லை!



## பன்னீர்செல்வம் திட்டவட்டம்

தேனி,ஏப்.19

சசிகலாவின் குடும்பம் அ.தி.மு.கவில் இருக்கக்கூடாது என்பதே எங்களின் அடிப்படைக் கொள்கை. சசிகலாவின் குடும்பம் அ.தி.மு.கவில் இருக்கும் வரை இரு அணிகள்இணைப்புக்குச் சாத்தியமில்லை.

- இவ்வாறு அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியின் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

அ.தி.மு.க. இரு அணிகளும் இணைவது தொடர்பாக பேச்சுகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை தேனி மாவட்டம் பெரியகுளத்தில் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கழகம் எப்போதும் குடும்பத்தின் பிடியில் செல்லக்கூடாது என்பதே எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் நிலைப்பாடாக இருந்தது. கட்சியும், ஆட்சியும் ஒரு குடும்பத்திடம் சென்று விடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அரசியலில் ஈடுபடமாட்டேன் என எழுதிக் கொடுத்துவிட்டுதான் சசிகலா கட்சியில் இணைந்தார். சசிகலா பொதுச்செயலாளர் ஆனமை சட்டவிதிகளின் படி செல்லாது.

இதேவேளை, ஜெயலலிதா மரணத்தில் புதைந்துள்ள சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும். இரு அணிகளும் இணைந்தாலும் ஜெயலலிதா மரணம் தொடர்பான மர்மம் குறித்து விசாரிக்கப்படும். நீதி நிலைநாட்டப்படும் வரை ஓயமாட்டோம்.- என்றார்.

இருதரப்பும் இணையும் என எதிர்பார்க்கப் பட்ட நிலையில் இணைப்புத் தொடர்பில் பன்னீர்செல்வம் கூறியிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ச)

# பாகிஸ்தானியர்களுக்கு விசா நிறுத்தம்!

பாகிஸ்தான் நாட்டவர்களுக்கான விசா வழங்கும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி மருத்துவ சிகிச்சைக்காக விசா கோருவோரின் விண்ணப் பங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள் என என உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் கடற்படை அதிகாரி குல்பூஷண் ஜாதவ் பாகிஸ்தானை உளவு பார்த்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் அவருக்குத்தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, ஜாதவைக் காப்பாற்றும் முயற்சியாக தூதரக அதிகாரிகளை சந்திக்க அனுமதி வழங்குமாறும், அவரது தீர்ப்பின் நகலைத் தங்களுக்கு அனுப்புமாறும் கோரிக்கைகளை முன்வைத்தது. ஆனால், இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் எந்தப்பதிலையும் தெரிவிக்காதமையால் அதிருப்தி அடைந்துள்ள மத்திய அரசு மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.(ச)

# பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மீறி சிறுமியை அழைத்துப் பேசிய மோடி!



பிரதமர் நரேந்திரமோடி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குஜராத் மாநிலம் சூரத்துக்கு சென்றிருந்தார்.

அப்போது அங்கு பாதுகாப்பு கட்டுப்பாடுகளைமீறி, 4 வயதுச் சிறுமியை அருகில் அழைத்துப் பேசி, பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

வீதியின் இருமருங்கிலும் ஏராளமானோர் கூடி நின்று பிரதமரை நோக்கி கையசைத்தனர். அப்போது கூட்டத்தில் இருந்த 4 வயதுச் சிறுமி ஒருவர், மோடியின் காரை நோக்கி முன்னேறி வந்தார். அதைப் பார்த்த கறுப்புப் பூனை படைக் கமாண்டோக்கள், அவரைத் தடுக்க முயன்றனர். அக்காட்சியைக் கண்ட பிரதமர் மோடி, பாதுகாப்பு கட்டுப்பாடுகளை மீறி, வாகன அணிவகுப்பை நிறுத்தச் சொன்னார். அத்துடன் அந்தச் சிறுமியை அனுமதிக்குமாறு கமாண்டோக்களிடம் கூறினார்.

சிறுமியை பக்கத்தில் அழைத்த மோடி, சிறுமியிடம் சில வார்த்தைகள் பேசியுள்ளார்.

இந்தக் காட்சி காணொலிப் படமாக எடுக்கப்பட்டு, சமூக வலைத்தளத்தில் வெளியாகி உள்ளது. (ச)

# சிறையில் சசிகலாவை தினகரன் சந்திக்கும் வாய்ப்பு வரலாம்!

பெங்களூர்,ஏப்.19

பெங்களூர் சிறையில் சசிகலாவை,அ.தி.மு.க. அம்மா பிரிவு துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் சந்திக்க வாய்ப்புள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சசிகலா கட்சியும், ஆட்சியும் தன் பிடியில் இருந்து நழுவி வருவதால் மீள முடியாத அதிர்ச்சியில் உள்ளார்.

இதனால், அவர் தினகரனுடனான சந்திப்பை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தாமாகவே தவிர்த்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்.கே.நகர் தொகுதி தேர்தல் ரத்து, அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் வருமானவரிச் சோதனை, உள்ளிட்ட அடுத்தடுத்த நெருக்கடிகளால் சிறையில் உள்ள சசிகலாவை சந்தித்து ஆலோசனை நடத்த டி.டி.வி. தினகரன் முடிவு செய்திருந்தார்.

இதற்காக அவர் பெங்களூர் சென்றார். ஆனால், அவர் சசிகலாவை சந்திக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

பிற்பகல் 3.30 மணிக்கு சசிகலாவை சந்திக்க தினகரனுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் டி.டி.வி.தினகரன் அந்த நேரத்துக்கு சிறைக்கு வரவில்லை. இதற்கிடையே தமிழக பதிவு எண் கொண்ட ஒரு சொகுசு கார் 2 தடவை பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைப் பகுதிக்கு வந்தது என தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனால், அந்த கார் சில நிமிடங்களில் புறப்பட்டுச் சென்று விட்டது. 6 மணிக்குப் பிறகு சிறைக்கு உள்ளே பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எனவே அதன் பிறகு டி.டி.வி.தினகரன் வந்து சசிகலாவைச் சந்திக்க இயலாது என்பது உறுதியானது.

ஆட்சியிலும், கட்சியிலும் தங்களுக்கு எழுந்துள்ள திடீர் எதிர்ப்பை எப்படி எதிர்கொண்டு சமாளிப்பது என்று சசிகலாவும், தினகரனும் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த சில தினங்களாக அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் சசிகலா கடும் அதிருப்தி அடைந்துள்ளாராம்.

இதன் காரணமாகத்தான் அவர் தினகரனுடனான சந்திப்பைத் தாமாகத் தவிர்த்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், மீண்டும் சசிகலாவை தினகரன் சந்திக்க வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தென் கொரியா - வட கொரிய எல்லையில் அமெரிக்க துணை ஜனாதிபதி திடீர் ஆய்வு!




சியோல், ஏப். 19

அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தென் கொரியா- வட கொரியா நாடுகளின் எல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் திடீர் ஆய்வு நடத்தியுள்ளார்.

வட கொரியா 6 ஆவது முறையாக அணு ஆயுத சோதனை நடத்தத் தயாராகி வருவது செயற்கைக் கோள் புகைப்படங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த நாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஏவுகணை சோதனை தோல்வி அடைந்தது.

அடுத்தடுத்து அணுஆயுத சோதனை, ஏவுகணை சோதனைகளை நடத்திவரும் வட கொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்று அமெரிக்கா ஏற்கெனவே எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க கடற்படையின் கார்ல் வின்சன் போர்க்கப்பல் தலைமையில் ஏராளமான போர்க்கப்பல்கள் கொரிய தீபகற்பத்தில் குவிக்கப்பட்டுள்ளன. வடகொரியா ஏவு கணைகளை வீசினால் அதைத் தடுக்கத் தென்கொரியாவில் ஏவுகணை தடுப்பு சாதனமும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ வீரர்களும் தென்கொரிய இராணுவ வீரர்களும் இணைந்து தொடர்ந்து போர் ஒத்திகை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் நேற்றுமுன்தினம் வட கொரிய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தென் கொரிய இராணுவ முகாமுக்கு நேரில்சென்று ஆய்வு செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,-

வட கொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களை உடனடியாகக் கைவிட வேண்டும். சீனா தனது செல்வாக்கை பயன்படுத்தி வடகொரியாவை பணிய வைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வட கொரியா விவகாரத்தில்இனியும்பொறுமை காக்க முடியாது. நாங்கள் எதற்கும் தயாராக உள்ளோம்

வடகொரியாநாட்டு இராணுவமும் அங்குள்ள மக்களும் தனது நேச நாடுகளுக்கு ஆதரவு அளித்துவரும் அமெரிக்காவின் பலத்தை தவறாகக் கணக்கிட்டு விடக் கூடாது. தென் கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் கோட்டையைப் போல உறுதி வாய்ந்ததாகும்.

அனைத்து விவகாரங்களுக்கும் சமாதானமாகவும், அமைதியான முறையிலும் பேச்சு நடத்தித் தீர்வு காணவே அமெரிக்கா விரும்புகிறது.

எங்கள் பலத்தின் மூலமாகவும் நாங்கள் அமைதியை விரும்புகிறோம் என்பதுதான் அமெரிக்க மக்கள் அளிக்கும் நற்செய்தியாகவும் உள்ளது.

அதேவேளையில், தென் கொரியா மக்களின் தோள்களுக்குத் துணையாக நின்று எவ்வித நிலைப்பாட்டையும் எடுக்க அமெரிக்கா தயாராக உள்ளது.- என்றும் தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசியல் தலை வர்கள் தென்கொரிய தலைநகர் சியோலில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு நாடு திரும்புவது வழக்கம்.

ஆனால், இந்த முறை துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் எல்லைப் பகுதிக்கு சென்று போருக்கான முன்னேற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்துள்ளார் என்றும் இது வழமைக்கு மாறான நடவடிக்கை என்றும் தென் கொரிய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 7 கோடி ஆண்டுகள் பழைமையான டைனோசர் முட்டைகள் கண்டெடுப்பு!



அஃகா மகுவோ, ஏப். 19

ஆர்ஜென்டினாவில் அஃகா மகுவோ என்ற தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்குட்பட்ட பகுதியில் 7 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய உயிர்க்கருவுடனான டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பட்டகோனியா பகுதிக்கு வடக்கு பிராந்தியத்தில் உள்ள அஃகாமகுவோ தொல்பொருள் ஆராய்ச்சிக்கு பிரபலமான இடத்தில் தான் இந்த முட்டைகள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த முட்டைகள் இன்னமும் உயிர்க்கருக்களுடன் தான் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அளித்த தகவலை அடுத்து, அங்கு சென்று ஆராய்ச்சியாளர்கள்,



முட்டைகள் உள்ளிட்டவற்றை மீட்டதாக உள்ளூர் கலாசார பாரம்பரிய பணிப்பாளர் க்ளவுடியா டெல்லா நெக்ரா தகவல் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பாக அஃகா மகுவோ பகுதியில் கடந்த 1997 ஆம் ஆண்டிலும் டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, தொடர்ந்து டைனோசர் பற்றிய படிமங்கள் மற்றும் முட்டைகள் என கண்டெடுக்கப்படுவதால், அந்தப் பகுதியைப் பாதுகாக்கும் விதமாக அங்கு படிம ஆய்வியல் பூங்காவை அமைக்க ஆர்ஜென்டின அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

அதேபோல், கடந்த 2014 இல் உலகின் மிகப்பெரிய டைனோசரின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன, அதன் மொத்த எடை 14 யானைகளின் எடைக்கு சமமாக இருக்குமாம். அதாவது சுமார் 77 டன் எடையும், 40 அடி நீளமும், 65 அடி உயரமும் கொண்ட டைனோசர் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

## சிரியாவில் வான் தாக்குதல்: பொதுமக்கள் 8 பேர் பலி!



வொஷிங்டன், ஏப். 19

சிரியாவின் கிழக்கு பகுதியில் அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 8 பேர் பலியாகியுள்ளனர்.

இதுகுறித்து சிரிய சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கையில்:-

ஈராக்கின் எல்லையோரத்தில் அமைந்துள்ள சிரியாவின் மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொது மக்கள் 8 பேர் பலியாகினர் என்று தெரிவித்துள்ளனர்.

ஆனால், லண்டனைத்தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சிரிய கண்காணிப்புக் குழு சிரியாவில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 14 பேர் பலியாகியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் இணைந்து தொடர்ந்து வான் வழித் தாக்குதலை நடத்தி வருகிறது, இதில் அப்பாவி பொது மக்கள் பலர் பலியாகி வருவது தொடர் கதையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வாராந்தம் ஏவுகணை சோதனை நடத்தப்படும் என வட கொரியா பகிரங்க அறிவிப்பு!

சியோல், ஏப். 19

வாராந்தம் தாம் ஏவுகணை சோதனை நடத்துவோம் என வடகொரியா பகிரங்கமாக அறிவித்துள்ளதை அடுத்து சர்வதேச அரங்கில் பதற்றம் அதிகரித்துள்ளது.

சர்வதேச அளவிலான கண்டனங்கள் மற்றும் அமெரிக்காவுடனான இராணுவ அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் சூழலிலும், வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் வாராந்த, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் மேலும் பல ஏவுகணை சோதனைகளை மேற்கொள்வோம் என வடகொரிய துணை வெளிவிவகார அமைச்சர் ஹான் சோங்-ரையோல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தால் முழுமையான போர் ஏற்படும் என ஹான் சோங்-ரையோல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


வடகொரியா ஏவுகணை சோதனைகளை முன்னெடுக்க கூடாதென அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் முன்னதாக எச்சரித்திருந்தார்.

அமெரிக்கா தங்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடுமானால் தாம் தமக்குரிய பாணியில் அணு வாயுதாக்குதலை மேற்கொள்வோம் என வட கொரிய துணை வெளி விவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர்





## இங்கிலாந்து காலநிலையை ஒத்த

# தியாத்தலாவ, கண்டியில் இலங்கை அணிக்குப் பயிற்சி!

கொழும்பு, ஏப்.19

பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் எதிர்வரும் ஜூன் மாத ஆரம்பத்தில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் ஆரம்பமாகவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவிருக்கும் இலங்கை அணி, தியத்தலாவ மற்றும் கண்டியில் ஆறு நாள்கள் கொண்ட கடும் செயற்திறன் மிக்க பயிற்சி முகா மொன்றில் பங்கேற்றுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் தொடர்பில் தேசிய அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தவை வருமாறு:-

இது இலங்கை கிரிக்கெட் சபை மூலம் தமது அணிக்கு கிட்டிய ஒரு வரப்பிரசாதமாகும்.

ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கும் எமது இலங்கை அணிக்கு நடைபெறவிருக்கும் ஐ.சி.சி. இன் சம்பியன் கிண்ணத் தொடரானது முக்கியமான ஒன்றாக இருக்கின்றது.

அதிதிறமைசாலிகளான எமது அணியின் இளம் வீரர்கள், உயர்தரமான கிரிக்கெட்டில் உள்ள சவால்களையும், சிறந்த கிரிக்கெட் விளையாட்டை வெளிப்படுத்த தேவையானவற்றையும் தற்போது கற்று, அவற்றை சரியான முறையில் எதிர்கொள்ளவும் பழகி வருகின்றனர்.

இந்தப் பயிற்சி முகாம் நிச்சயமாக எமது வீரர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்கும். அவர்களின் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்பதிலும் சந்தேகமில்லை. இவற்றினால், வரும் சம்பியன் கிண்ணச் சுற்றுத்தொடரில் நாம் பயனுள்ள ஆட்டத்தை வெளிக்காண்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளரான கிரகம் போர்ட்டும் இப்படியான ஒரு பயிற்சி முகாமை ஏற்பாடு செய்திருந்த

> “ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கும் எமது இலங்கை அணிக்கு நடைபெறவிருக்கும் ஐ.சி.சி. இன் சம்பியன் கிண்ணத் தொடரானது முக்கியமான ஒன்றாக இருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் வாரியத்தினைப் பாராட்டியுள்ளார்.

மேலும், எமது இளம் அணி சம்பியன் கிண்ணத்தில் பங்கேற்கும் எந்த அணியினரையும் இலகுவாகத் தோற்கடிக்கக் கூடிய ஒரு அணி. அதற்குள் எமது அணிக்கு நாம் வழங்க வேண்டியது ஒரு சிறந்த ஊக்கமேயாகும்.

எங்களுக்கு வளங்களில் எந்த குறைபாடுகளும் இல்லை. ஒரு சிறந்த மனநிலையை உருவாக்குவதில்தான் முயற்சிக்க வேண்டியுள்ளது.- என்றும் தெரிவித்துள்ளார்

இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக தேசிய அணியின் முகாமையாளரும் அணித் தேர்வாளர்களில் ஒருவருமான அசங்க குருசிங்க தெரிவித்தவை வருமாறு:-

நாம் தேர்வு செய்திருக்கும் கண்டி மற்றும் தியத்தலாவ ஆகிய இடங்களின் காலநிலை, கிட்டத்தட்ட எமது அணி விளையாடப் போகும் இங்கிலாந்து நாட்டின் காலநிலைகளை ஒத்தது. எனவே, இவ்வாறானதொரு நிலைமையில் எமது வீரர்களை ஆயத்தப்படுத்துவது பயனளிக்கக் கூடியது.

மேலும், கண்டிநகரில் வைத்து வீரர்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்து தருவது சிறந்த விடயமாகும்.

இலங்கை அணி எட்டு நாள்களுக்கு முன்னதாகவே இங்கிலாந்திற்கு புறப்படுகின்றது. இதன் மூலம் ஸ்கொட்லாந்தின் தேசிய அணியுடன் இரண்டு பயிற்சிப் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இப்பயணத்திற்கான செலவுகளை பொறுப்பேற்றிருக்கும் இலங்கை கிரிக்கெட் வாரியம், இந்த பயிற்சிப் போட்டிகள் மூலம் இங்கிலாந்து நாட்டின் மைதான நிலைமைகளை சரிவர அவதானித்து, அதன்மூலம் இலங்கை அணி சிறப்பாக செயற்பட முடியும் என்பதனை எதிர்பார்க்கின்றது.- என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான இரண்டு போட்டிகள் ஒரு புறம் இருக்க, இதற்கு மேலதிகமாக சம்பியன் கிண்ணத்தில் பங்குபற்றும் அனைத்து அணிகளுக்குமான பயிற்சிப் போட்டிகளையும் சர்வதேச கிரிக்கெட் வாரியம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கு எட்டு தூதுவர்கள்!

கொழும்பு, ஏப். 19

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான சம்பியன் தூதுவர்களாக இலங்கையின் குமார் சங்கக்கார உட்பட எட்டு பிரபல வீரர் களை சர்வதேச கிரிக்கெட் பேரவை பெயரிட்டுள்ளது.

குமார் சங்கக்காரவைவிட பாகிஸ்தானின் ஷஹித் அவ்ரிடி, பங்களாதேஷ் ஹபிபுல் பஷார், இங்கிலாந்தின் இயன்பெல், நியூஸிலாந்தின் ஷேன் பொண்ட், ஆஸ்திரேலியாவின் மைக்ஹசி, இந்தியாவின் ஹர்பஜன் சிங், தென் ஆபிரிக்காவின் கிரேம்ஸ்மித் ஆகியோரும் சம்பியன் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

குமார் சங்கக்கார 2002 முதல் 2013வரை ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

“சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான தூதுவர்களில் ஒருவராக சர்வதேச கிரிக்கெட் பேரவை என்னை பெயரிட்டுள்ளமை எனக்கு கௌரவமாக இருக்கின்றது. இந்த வாய்ப்பை வழங்கிய பேரவைக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன்.

கடந்த காலங்களில் நான் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கு பற்றிய கிரிக்கெட் விளையாட்டுப்போட்டியுடன் நெருக்கமாக செயற்பட எனக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு எனது பங்களிப்பை வழங்க நான் தயாராக இருக்கின்றேன்.

‘இன்னும் இரண்டு வருடங்களில் இதே சூழலில் நடைபெறவுள்ள 2019 ஐ.சி.சி. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான முன்ஆயத்தமாக மீள் எழுச்சியை நோக்கிநகர்ந்து கொண்டிருக்கும் இளம் இலங்கை அணி பயன்படுத்திக்கொள்ளும் என நான் நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குமார் சங்கக்கார 404 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 25 சதங்கள், 93 அரைச்சதங்கள் அடங்கலாக மொத்தம் 14,234 ஓட்டங்களைக் குவித்தவராவார்.

இந்த எட்டு தூதுவர்களும் மொத்தமாக 1,774 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 51,906 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றுள்ளனர். இவர்களால் 48 சதங்கள் குவிக்கப்பட்டுள்ளதுடன் 838 விக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிமுதல் 18 ஆம் திகதிவரை லண்டன் ஓவல், பேர்மிங்ஹாம் எஜ்பஸ்டன், கார்டிவ் வெல்ஸ் ஆகிய மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணமான நிசன் கிண்ணம் ஐக்கிய இராச்சியத்தில் சுற்றுப்பயணமாக கொண்டு செல்லப்படும் போது இந்த எட்டு தூதுவர்களும் அதில் பங்கேற்கவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

அத்துடன், நலனுக்கான கிரிக்கெட் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் பயிற்சிகளின்போது கிரிக்கெட் மேதைகளுடன் (எட்டு தூதுவர்கள்) பாடசாலை பிள்ளைகள் விளையாடுவதற்கான திட்ட நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த எட்டு கிரிக்கெட் வீரர்களும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் (ஐ.சி.சி.) ஆசிரியர் பீடத்தில் இணைக்கப்படுவதுடன் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான முன்னாய்வு கட்டுரைகளையும் அணிகள் தொடர்பிலான பகுப்பாய்வுக் கட்டுரைகளையும் ஐ.சி.சி. யின் இணையத்தளத்தில் பிரத்தியேகமாக வெளியிடுவர்.




# டில்லி அணியை வீழ்த்தியது கொல்கத்தா நைட்ரைடர்ஸ்!

டில்லியில் நடைபெற்ற பரபரப்பான போட்டியில் கடைசி ஓவரில் சிக்ஸ்சர் அடித்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வெற்றி பெற வைத்தார் மணீஷ் பாண்டே.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற முதல் போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய டில்லி டேர் டெவில்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 168 ஓட்டங்களைச் சேர்த்தது. தொடக்க வீரர் சாம்சன் 39 ஓட்டங்கள், ரிஷாப் பந்த் 38 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பின்னர் 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக கம்பீர், கிராண்ட் ஹோம் ஆகியோர் களம் இறங்கினார்கள். கிராண்ட் ஹோம் 1 ஓட்டங்கள், கம்பீர் 14 ஓட்டங்கள், அடுத்து வந்த உத்தப்பா 4 ஓட்டங்கள் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இதனால் கொல்கத்தா அணி 21 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மூன்று விக்கெட்டுக்களை இழந்தது. 4 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மணீஷ் பாண்டே - யூசுப் பதான் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் அரைசதம் அடித்தனர். இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்கு 110 ஓட்டங்கள் குவித்தது.

யூசுப்பதான் 39 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 59 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் 7 ஓட்டங்களில் வெளியேறினார்.

கொல்கத்தா அணியின் வெற்றிக்கு கடைசி இரண்டு ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கிறிஸ் மோரிஸ் வீசிய 19 ஆவது ஓவரில் கொல்கத்தாஅணி 7 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் கடைசி ஓவ ரில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

மொகமது ஷமி மற்றும் மத்யூஸ் ஆகியோருக்கு ஓவர் இருக்கும் நிலையில் யாரும் எதிர்பார்க்காத வகையில் கடைசி ஓவரை சுழற்பந்து வீச்சாளர் மிஸ்ரா வீசினார்.

முதல் பந்தை தவற விட்ட கிறிஸ் வோக்ஸ் 2 ஆவது பந்தில் ஸ்டம்பிங் ஆனார். இதனால் கடைசி நான்கு பந்தில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. சுனில் நரைன் களம் இறங்கினார்.

3 ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். கடைசி 3 பந்தில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 4 ஆவது பந்தை மணீஷ் பாண்டே எதிர் கொண்டார். ஆஃப் ஸ்டம்பிற்கு மிகவும் வெளியே வீசிய பந்தை, அபாரமாக லாங் மிட்ஆன் திசையில் தூக்கி அடித்தார். பேட் கம்மின்ஸ் பவுண்டரி லைனில் பிடியெடுக்கத் தயாராக இருந்தார். ஆனால் பந்து அவரையும் தாண்டி சிக்ஸருக்கு பறந்தது. அடுத்த பந்தில் இரண்டு ஓட்டங்கள் அடிக்க கொல்கத்தா அணி 1 பந்து மீதமுள்ள நிலையில் 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மணீஷ் பாண்டே 49 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

# பஞ்சாப்பை சாய்த்தது சன்ரைசர்ஸ் ஐதராபாத்!

ஐதராபாத், ஏப். 19

10 ஆவது ஐ.பி.எல். தொடரின் 19 ஆவது லீக் ஆட்டம் ஐதராபாத் ராஜுவ் காந்தி மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சன்ரைசர்ஸ் ஐதராபாத் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய ஐதராபாத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்தது.

ஐதராபாத் அணியில் தலைவர் வோர்னர் 54 பந்துகளில் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் என 70 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். நமன் ஓஜா 20 பந்துகளில் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸர் என 34 ஓட்டங்கள் எடுத்திருந்த போது கரியப்பா பந்தில் சஹாவிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.


160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தொடக்க வீரர்களாக அம்லா, மனன் வோஹ்ரா களமிறங்கினர்.

இதில் புவனேஸ்வர்குமார் வீசிய முதல் பந்தில் அம்லா எல்.பி.டபிள்யூ ஆனார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய தலைவர் மேக்ஸ்வெல் 10 ஓட்டங்கள், மோர்கன் 13 ஓட்டங்கள், டேவிட் மில்லர் 1 ஓட்டம் எடுத்து ஆட்டமிழக்க பஞ்சாப் அணி தடுமாறியது.

பின்னர் வந்த அனைவருமே சொற்ப ஓட்டங்களில் வெளியேற, தொடக்க வீரராக களமிங்கிய மனன் வோஹ்ரா மட்டும் அணியின் வெற்றிக்காக போராடிய நிலையில், 18.3 ஆவது ஓவரில் புவனேஷ்வர் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அவர் 50 பந்துகளில் 9 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் என 95 ஓட்டங்கள் விளாசினார். ஐதராபாத் அணியில் புவனேஸ்வர்குமார் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களை எடுத்தது. இதையடுத்து சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.






# 6–1 என யுவான்டசையும் வீழ்த்துவோம்: நெய்மர் நம்பிக்கை!

பாரிஸ், ஏப் 19

பாரிஸ் செயன்ட் ஜெர்மைன் அணிக்கு எதிராக அதிசயம் நடக்கும் வகையில் 6-1 என வெற்றி பெற்றதுபோல், யுவான்டஸ் அணிக்கு எதிராகவும் வெற்றி பெறுவோம் என்று நெய்மர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள உதைபந்து கிளப் அணிகளுக்கு இடையிலான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் போட்டி காலிறுதி நிலையை அடைந்துள்ளது.

காலிறுதிக்கு முந்தைய நொக் அவுட் சுற்றில் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா - பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் செயன்ட் ஜெர்மைன் அணிகள் மோதின. இரண்டு அணிகளும் தங்களுடைய சொந்த மைதானத்தில் தலா ஒரு முறை மோத வேண்டும். முதல் போட்டி பாரிஸ் செயன்ட் அணிக்குச் சொந்தமான மைதானத்தில் நடைபெற்றது. இதில் பார்சிலோனாவை 4-0 என பாரிஸ் செயன்ட் ஜெர்மைன் அணி துவம்சம் செய்தது.

பின்னர் பார்சிலோனாவுக்குச் சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அதிசயம் நடக்கும் வகையில் பார்சிலோனா 6-1 என பாரிஸ் செயன்ட் ஜெர்மைன் அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

கடந்தவாரம் நடைபெற்ற காலிறுதி முதல் லெக்கில் பார்சிலோனா, இத்தாலி கிளப்பான யுவான்டஸை அதன் சொந்த மைதானத்தில் எதிர்கொண்டது. இதில் பார்சிலோனா 0-3 என தோல்வியடைந்தது.

2 ஆவது போட்டி பார்சிலோனாவிற்கு சொந்த மான மைதானத்தில் இன்று நள்ளிரவு இடம் பெறவுள்ளது.

இதில் பார்சிலோனா 4-0 என அல்லது இரண்டிலும் சேர்த்து யுவான்டஸை விட ஒரு கோல் அதிகம் பெற வேண்டும். அப்படி என்றால்தான் அரையிறுதிக்கு தகுதி பெற முடியும்.

இந்நிலையிலேயே, பாரிஸ் செயன்ட் ஜெர்மைன் அணிக்கெதிராக எப்படி அதிசயம் நடக்கும் வகையில் விளையாடினோமோ, அதேபோல் யுவான்டஸ் அணிக்கெதிராகவும் நடக்கும் என பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## கடல்நீரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செயற்றிட்டத்தை உடனடியாகக் கைவிட யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

மருதங்கேணிப் பிரதேசத்தில் கடல் நீரை நன்னீராக்கும் செயற்றிட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன், மருதங்கேணிக் கடற்றொழிலாளர் ஒன்றியங்களின் பிரதிநிதிகள், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயேநாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தின் நன்னீர்ப் பிரச்சினையைத்தீர்க்கும்வகையில், மருதங்கேணிப் பகுதியில் கடல் நீரை, நன்னீராக மாற்றுவதற்கான யோசனை முன் வைக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த செயற்றிட்டத்தை மேற்கொண்டால், அப்பகுதியில் மீன்பிடியை தமது பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப் படும் என அப் பகுதி மக்கள் இத் திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக இந்த மக்களது சந்தேகத்திற்கு விஞ்ஞான ரீதியாக எதுவித பாதிப்பும் ஏற்படாது என்பதை நிரூபிக்க முடியும் என அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் மருதங்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதனூடாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்க முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து ஆய்வுக்கு அனுமதியளிக்கப்பட்டதுடன், மேற்படி செயற்றிட்டத்தைப் பிறிதொரு இடத்தில் மேற்கொண்டால் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் என்பது தொடர்பிலும் ஆராயுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. அந்த மக்கள் எவ்வாறு சந்தேகப்பட்டார்களோ அதுதற்போதுவிஞ்ஞான ரீதியான தரவுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தை மேற்கொண்டால், அப்பகுதியில் விசேடமாக மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடி முறைகளை அது பாதிக்கும் என்பது உறுதியாகியுள்ளது.

அக்கடற்பகுதியில் காணப்படும் நீரோட்டம், காலநிலை பருவப் பெயர்ச்சிகள், நீரோட்டப் பருவப்பெயர்ச்சிகள், குறிப்பிட்ட காலத்தில் நீர் அசையாமல் நிற்பது போன்ற சந்தர்ப்பங்களில் இச்செயற்றிட்டத்தினூடாகப் பாதிப்பு ஏற்படும். அதிகளவான நீரை உள்ளீர்த்துப் பின்னர் அதிகளவான உப்பு செறிவான நீரை வெளியேற்றும் போது பாதிப்பு ஏற்படும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றைவிடக் அந்தச் செயற்றிட்டத்தைப் பிறிதொரு இடத்தில் மேற்கொண்டால் எவ்வாறான நிலைமை காணப்படும் என்பது தொடர்பாக ஆய்வுகள் செய்யப்படவில்லை.

இவ்வாறான நிலையில், ஓர் இடைக்காலத் தீர்வாகக் கூட இச் செயற்றிட்டத்தை மருதங்கேணிப் பிரதேசத்தில் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதனால். அந்தத் திட்டத்தை முற்றாகக் கைவிட வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்து அதை யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு அறிவித்துள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இரசாயன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) "எனது பெயர் வி.ஜி.குலரத்ன.எனக்கு55வயதாகின்றது. இங்கு குடிபெயர்ந்து 32 வருடங்களாகின்றன. அப்போது இங்குவரும்போது வயல்நிலங்களே காணப்பட்டன. அதில் 2 ஏக்கரில் குப்பைகளைக் கொட்டுவதாக அரசாங்கம் முடிவெடுத்தது. மொத்தமாக 22 ஏக்கரில் குப்பைகளைக் கொட்டினார்கள். இந்தவிபத்து இடம்பெறுவதற்கு 4 வாரங்களுக்கு முன்னர் குப்பைமேட்டின் மீது இரசாயனக்கலவை தூவப்பட்டது. அதன் தாக்கத்தினாலேயே விபத்து நேர்ந்திருக்கலாம் என நான் கருதுகிறேன். அதன்பின்னர் அருகிலுள்ள வீடுகளின் சுவர்கள் வெடிப்பதற்கு ஆரம்பித்தன'' என்றார்.

இதேவேளை இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 246 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 59 பேர் கொலன்னாவ டெரன்ஸ் த சில்வா மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான நிவாரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

அங்கு தங்கியிருக்கும் ஒருவர் கூறினார் -

"அரச அதிகாரிகளிடம் இந்த விபத்து இடம்பெறுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னரே எச்சரிக்கை விடுத்தோம். ஆனால் அவர்கள் அதனைக் கிடப்பில் போட்டபடியினால் அனர்த்தம் நிகழ்ந்து விட்டது" எனக் குறிப்பிட்டார். (இ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வியாழக்கிழமை காலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணிகளும் -

அடுத்த நாள் வெள்ளிக் கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள காணிகளும் -

கள ஆய்வுக்கு உட்படுத்தப் படும். கிளிநொச்சி மாவட்டக் காணிக் கள ஆய்வில் சி.சிறிதரன் எம்.பியும், யாழ். மாவட்டக் காணிகளின் கள ஆய்வில் மாவை சேனாதிராசா எம்.பியும், எம்.பி.சுமந்திரன் எம்.பியுடன் சேர்ந்து ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் மாவட்டக் காணிகளை விடுவிப்பதற்கான கள ஆய்வு நடவடிக்கைகளை எப்போது மேற்கொள்வது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

அடுத்து வரும் நாள்களில் அது குறித்துத் தீர்மானிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## வேலையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானமும் மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஸும் இது தொடர் பாக என்னோடு பேசினார்கள். இதன் அடிப்படையிலேயே வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளைத் தாருங்கள் என உத்தி யோகத்தர்களிடம் கேட்டுப் பெற்றிருக்கின்றேன்.

இதனையடுத்து சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை அழைத்துக் கலந்துரையாடினேன். அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை எமக்கு வழங்குமாறு கேட்டுள்ளேன். அந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கலாம்.- என்றார்.

மேலும், 1300 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும். அதே போல் 800 சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் 35 முன்னாள் போராளிகளான பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படும்.-எனவும் வடக்கு ஆளுநர் கூறினார். (ம)

## முள்ளிக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுக்கின்றனர்.

முள்ளிக்குளம் தமிழ் மக்கள் தங்கள் பூர்வீகக் குடியிருப்புக் காணியை விடுவிக்கக்கோரி மறிச்சுக்கட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்கு முன்பாக ஈடுபட்டுவரும் சாத்வீகப் போராட்டம் இன்றுடன் 28ஆவது நாளை எட்டியுள்ளது.

இவர்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

முள்ளிக்குளம் மக்களின் காணியை விடுவிக்கக்கோரி மன்னார் மறை மாவட்டத்தில் தீவுக்குள் அமைந்துள்ள அனைத்துப் பங்குகளுடன் மன் னார் பெரு நிலப் பரப்பிலுள்ள அதிகமான பங்குகளும் இணைந்து இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு மன்னார் பேராலயமான புனித செபஸ்தியார் பேராலய முன்றிலில் அனைவரும் ஒன்று கூடியதும் அங்கு மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் உட்படப் பலர் உரையாற்றிய பின், பங்கு ரீதியாக மக்கள் முள்ளிக்குளம் மக்களின் நில விடுவிப்பு சம்பந்தமான பதாகைகளை ஏந்திய வண்ணம் மன்னார் நகரின் பிரதான வீதிகள் ஊடாக மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று, மன் னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-112)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முடியும்."

-இவ்வாறு மட்டக்களப்பில் போராட்டம் நடத்திவரும் வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் இந்தப் போராட்டம் நேற்று 57 ஆவது நாளை எட்டியிருந்தது.

"கடந்த சில நாள்களுக்கு முன் அரசியல்வாதிகள் எங்களை வந்து பார்த்தார்கள். பலதரப்பட்ட விடயங்கள் குறித்து உரையாடினார்கள். அவ்வளவுதான்.

அரசதரப்பினர் எவ்வளவோ பணத்தை வெளிநாடுகளுக்குச் சென்று வர இறைக்கின்றனர். அதை வைத்து எமக்குத் தொழில் வாய்ப்பு வழங்க முடியாதா?'' என்றும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர். (இ-ச)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முல்லைத்தீவு- கொக்கிளாய் பகுதியில் பூர்வீகமாகத் தமிழ் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்ட கரைவலைப்பாடுகளில், யுத்தத்திற்குப் பின்னர் சிங்கள மீனவர்கள் அத்துமீறித் தொழில் செய்து வருகின்றனர்.

சிங்கள மீனவர்களின் செயற்பாட்டால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த தமிழ் மீனவர்கள், இதற்குத் தீர்வு காணுமாறு பல தரப்பினரிடமும் கோரிக்கைவிடுத்தனர். ஆனால், எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்நிலையில், கொக்கிளாய் பகுதியில் தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் கடந்த 2016.07.20 ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ் மீனவர்கள் இறங்குதுறை அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டிருந்த நிலையில் சிங்கள மீனவர்களின் கடுமையான எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது.

இந்நிலையில், கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சின் உதவியுடன் தமிழ் மீனவர்ளுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது.

அடுத்தவழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், மேற்படி இறங்குதுறை அமைக்க பிரதேச செயலகம் அனுமதி வழங்கிய பகுதியில் உள்ள பாடுகளைப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மற்றும் தமிழ் மீனவர்கள் ஆகியோர் இணைந்து 18 ஆம் திகதி (நேற்று) அளவீடு செய்யவேண்டும் என நீதிமன்றம் பணித்திருந்தது.

இதற்கமைய அளவீடுகளை மேற்கொள்வதற்காக நேற்று அதிகாரிகள் அங்கு சென்றிருந்தபோது, கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் அத்துமீறித் தங்கியிருக்கின்ற சிங்கள மீனவர்கள் அளவீடு செய்வதற்கு இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இதனால் அங்கு இரு தரப்பினருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது சிங்கள மீனவர்கள் ஆவேசம் கொண்டவர்களாக தமிழ் மீனவர்களையும் தமிழ் அதிகாரிகளையும் தாக்க முற்பட்டனர். அத்துடன், அவர்களை அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களால் திட்டித் தீர்த்தனர்.

அரச அதிகாரிகளைக் கொல்வார்கள் எனவும் உயர் அதிகாரிகளுடன் கதைத்து அவர்களை இடமாற்றம் செய்வார்கள் எனவும் சிங்கள மீனவர்கள் எச்சரித்தனர். குறிப்பாக, கொக்கிளாய் கிராம சேவையாளருக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அந்த இடத்தில் அளவீடு செய்யமுடியாது எனத் தெரிவித்த சிங்கள மீனவர்கள் உடனடியாக தமிழ் மீனவர்களையும் அதிகாரிகளையும் அங்கிருந்து வெளியேறுமாறும் கடும் தொனியில் மிரட்டினர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், அளவீட்டுக்கு வந்திருந்த கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் சிங்கள இனத்தவர்களாக இருந்தமையால் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளும் சிங்கள மீனவர்களின் பக்கம் சார்ந்தனர் என தமிழ் மீனவர்கள் குற்றம்சாட்டினர்.

இந்தக் களேபரங்களுக்கு மத்தியில், நீதிமன்றம் பணித்த இடங்களை விடுத்து சிங்கள மீனவர்கள் காட்டிய வேறு இடங்களில் அளவீடுகள் செய்வதற்கு அதிகாரிகள் முயன்றனர். இதனால் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

தமது மேற்பார்வை இன்றியே அங்கு அளவீடு இடம்பெற்றது என அவர்கள் நில அளவை திணைக்களம், முல்லைத்தீவு நீதிமன்றம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவை மீறி அங்கு நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக எதிர்வரும் 24 ஆம் திகதி தாங்கள் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுசெல்வார்கள் என அரச அதிகாரிகளும் தமிழ் மீனவர்களும் தெரிவித்தனர். (ம-81)

## கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலட்சத்து 50 ஆயிரத்து 603 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறியுள்ளது.

இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக ஒரு இலட்சத்து 96 ஆயிரம் குடும்பங்கள் குடிதண்ணீர் உட்பட தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நீரைப் பெறுவதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன.

வறட்சி காரணமாக வடக்கு மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குளங்களும், நீர் நிலைகளும் வற்றிப் போயுள்ளன. இதனால் பல மைல்தூரம் நடந்து சென்றே நீரைப் பெற வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், சிறுதானியச் செய்கை உட்பட விவசாய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மரக்கறிப் பயிர்கள் மற்றும் பலதாவரங்கள் நீரின்றி கருகும் நிலை உருவாகியுள்ளதால் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சப்ரகமுவ, மேல் மாகாணத்தில் மாலை நேரங்களில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்தாலும் அது வறட்சியைச் சமாளிக்கும் வகையில் அமையவில்லை.

எதிர்வரும் 23, 24ஆம் திகதியளவிலேயே மழை பெய்யக் கூடும் என்றும், அதுவும் தென் மேற்குப் பிராந்தியத்திலேயே பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மதியம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் வறட்சி காரணமாக, கிழக்கு மாகாணத்தில் 95 ஆயிரத்து 334 பேரும், மேல் மாகாணத்தில் ஆயிரத்து 128 பேரும் தென் மாகாணத்தில் 3 ஆயிரத்து 77 பேரும், வடமத்திய மாகாணத்தில் ஒரு இலட்சத்து 990 பேரும்,

வடக்கு மாகாணத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரத்து 603 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 3 ஆயிரத்து 369 பேரும், வடமேல் மாகாணத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 439 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆளுநர் அலுவலகத்தில் புதுவருட ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப்.19


புதுவருடத்தை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சிநேகபூர்வ ஒன்றுகூடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த ஒன்று கூடல் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பில் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.


இதேவேளை, இதன்போது பாடசாலை மாணவர்கள் ஆயிரம் பேருக்கு பாடசாலை புத்தகப் பைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# குற்றம் கூறி பயனில்லை இழப்பீடுகளை வழங்குக!

### நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.19

ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டு இருக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-


இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் பல அனர்த்தங்களை நாடு சந்தித்துள்ளது. அவற்றுள் அரநாயக்கமண்சரிவு, சாலாவ ராணுவ முகாம் விபத்து, கொலன்னாவை வெள்ளம் உள்ளிட்டவை முக்கியமானவையாகும்.

அந்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு இழப்பீடுகளைவழங்கவில்லை. அரநாயக்க மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் கூடாரங்களில் வாழ்கின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையிலே கடந்த வாரம் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு இடம்பெற்றுள்ளது. இந்த அனர்த்தத்தை எதிர்கொள்ள முடியாத இந்த அரசு ஒருவர் மீது ஒருவர் பழி போட்ட வண்ணம் காலத்தைக் கடத்துகிறது.

அனைத்து அனர்த்தங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ஐ)

## நாளை மின்தடை



யாழ்ப்பாணம், ஏப்.19

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, மன்னார் பிரதேசத்தில் நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன் ஆகிய இடங்களில் மின்சாரத்தடைப் படும்என்றுமின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## 20 நெடுஞ்சாலைகளை புனரமைக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப்.19

நாட்டில் 564.53 கிலோ மீற்றர் மொத்த நீளத்தைக் கொண்டதாக 20 நெடுஞ்சாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தநெடுஞ்சாலைகளின் புனரமைப்புப் பணிகள் 5 800 கோடி ரூபா செலவில் அடுத்துவரும் 3 வருடங்களுக்குள் அபிவிருத்தி செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சமர்ப்பித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் மொத்த நீளம் 12 ஆயிரம் கிலோ மீற்றர் ஆகும். இதில் 7 ஆயிரத்து 900 கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வில்பத்து வர்த்தமானியை ரத்தாக்க கோரும் தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பு

வில்பத்துப் பிரதேசத்துக்கு உரிய வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் கிழக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனக் கோரும், தனிநபர் பிரேரணை மாகாண சபையின் அவைத் தலைவர் சந்திரதாச கலப்பதிக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறுக் இந்தப் பிரேரணையைஅனுப்பிவைத்துள்ளார்.

மாகாண சபையின் அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், வில்பத்துக் காணிப்பிரச்சினை தொடர்பான பிரேரணை தொடர்பில் உரையாற்றவுள்ளதாகவும் பாறூக் கூறினார்.

''வில்பத்துப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களின் பூர்வீகக் காணிகள் உள்ளடக்கிய இடத்தை அவசரமாக வன பரிபாலனத்திணைக்களத்துக்கு உரிய பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் நடவடிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கூட நடைபெறாத இவ்வாறான விடயங்கள், இந்த நல்லாட்சி அரசின் காலத்தில் நடைபெறுவது மிகவும் கவலைக்குரியதாகும்.

எனவே, பொதுமக்களுடைய காணிகளை உள்ளடக்கியதாக அறிக்கையிடப்பட்டுள்ள வில்பத்துப் பிரதேசத்துக்குரிய வர்த்தமானி அறிவித்தலை உடனடியாகஇரத்துச்செய்யவேண்டும் என்று முன்மொழிகின்றேன்.''- என்று அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## ஆட்கொல்லி முதலைகளை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஏப்.19

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நடமாடிவரும் ஆட்கொல்லி முதலைகளைப் பிடிக்கும் நடவடிக்கை கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த முதலைகளால் கடந்த வருடம் மூன்று யாத்திரிகர்கள் கொல்லப்பட்டனர். ஆறு பேருக்குப் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்து அங்கிருந்த பத்து முதலைகள் பிடிக்கப்பட்டு உடவளவை நீர்த்தேக்கத்தில் விடப்பட்டன.

இப்போது அங்கு 20 முதலைகள் நடமாடி வருகின்றன. அவற்றையும் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வனஜீவராசிகள் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சரத் பதிரத்ன, இந்த முதலைகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வந்தாலும் புதியவை வேறு பிரதேசங்களில் இருந்து வருவதைத் தடுக்கமுடியாது. யாத்திரிகர்கள் நீராடுவதற்குப் பாதுகாப்பான குளியல்துறை ஒன்றை ஏற்படுத்தித் தருவதே நிரந்தரத் தீர்வாக அமையும்.- என்றார். (ஐ)

## முல்லைத்தீவில் பண்டாரவன்னியன் சிலை திறப்பு!

மாவீரன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியனில் திருவுருவச் சிலை நாளை வியாழக்கிழமை முல்லைத்தீவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இந்தச் சிலையைத் திறந்து வைக்கவுள்ளார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சால், முல்லைத் தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபைக்கு அருகில் இந்த உருவச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உயிரிழந்த மக்களுக்கு மட்டக்களப்பு பட்டதாரிகள் அஞ்சலி

மீதொட்டமுல்ல பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்று பகல் காந்தி பூங்கா முன்பாக அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் ரி.கிருஷாந்த் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருமளவான பட்டதாரிகள் கலந்து கொண்டுள்ளனர். இதன்போது, உயிரிழந்தவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு இரு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்லையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் விரைவான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நல்லாட்சி அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கு பட்டதாரிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ஐ)



## மெய்மறந்து ரசித்த இசை மழை!



ஈழத்தின் முது பெரும் கர்நாடக இசைக்கலைஞன் பொன்.சுந்தரலிங்கத்தின் விசேட கர்நாடக இசை நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்திய, இலங்கைக் கலைஞர்களின் மங்கல வாத்திய இசையைத் தொடர்ந்து, பொன்.சுந்தரலிங்கத்தின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.




## அல்வாயில் பாடசாலை மீது வீழ்ந்தது ஆலமரம்



வடமராட்சி, ஏப்.19

வடமராட்சியில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்துக்கு முன்னால்பெரும்விருட்சமாக நின்ற ஆலமரம் ஒன்று முறிந்து வித்தியாலய முகப்பின் மீது வீழ்ந்தது. இதனால் வித்தியாலய முகப்புப் பகுதி சேதமடைந்துள்ளது.

நேற்று மதியம் வீசிய காற்றின் காரணமாகவே மேற்படி ஆலமரம் முறிந்து வீழ்ந்தது. இதனால் பாடசாலை முன்பக்க மதிலும் சேதமடைந்தது.

பாடசாலைகளுக்கு தற்போது முதலாம் தவணை விடுமுறை விடப்பட்டுள்ளதால் எவருக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

பாடசாலை நடைபெறும் நேரமாக இருந்திருந்தால் மாணவர்களுக்குபாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும் என பெற்றோர்கள் தெரிவித்தனர். (ம-40)

## சிறுவர்களின் கலகலப்பு நிகழ்வு



நல்லூரில் அமைந்துள்ள "பைவ் ஸ்குயர்" – Five Square – சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த நாற்பது பேர் கொண்ட குழுவினருக்கு–நாடகமும், அரங்கியலும் குறித்த செயலமர்வு கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதிமேஜர் ஜெனரல் தர்ஸன ஹெற்றியாராய்ச்சியின் வழிகாட்டலின் கீழ் செயலமர்வு நடத்தப்பட்டது.

இலங்கை மகளிர் இராணுவ அணியின் ஏழாவது அணியினரின் வழிநடத்தலின் பேரில், நடத்தப்பட்ட திருமதி ரத்ன புஸ்ப குமாரியின் இச்செயலமர்வில் நாற்பது சிறுவர்கள் பங்குபற்றி நிகழ்ச்சியைக் கலகலப்பாக நிறைவேற்றினர். (அ)

## வடக்கு மாகாணப் புதுவருடக் கொண்டாட்டம் இம்முறை வவுனியா நகரில் ஞாயிறன்று!

### நகரசபை மைதானத்தில்

வவுனியா, ஏப். 19

வடக்கு மாகாணமட்டத்திலானபுதுவருடக்கொண்டாட்டங்கள் இம்முறை, எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறைஅமைச்சின்பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்அனுசரணையுடனும், வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்புடனும் இந்தக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் இருந்து நெடுந்தூரச் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் என்பன ஆரம்பித்து வைக்கப்படும்.

வவுனியா மாவட்ட அரசஅதிபர் எம்.பி.ஆர். புஸ்பகுமார சைக்கிள் ஓட்டப்போட்டிகளையும், உதவி மாவட்டச் செயலாளர் நா.கமலதாசன் மரதன் ஓட்டப்போட்டிகளையும் ஆரம்பித்து வைப்பர்.

தொடர்ந்து காலை 9 மணிக்கு வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் ஏனைய விளையாட்டுப்போட்டிகளும், கலை நிகழ்வுகளும் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த நிகழ்வுகளில், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான், வைத்தியர் சி.சிவமோகன், திருமதி சாந்திஸ்ரீஸ்கந்தராஜா, சாள்ஸ்நிர்மலநாதன்ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் – சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள்அமைச்சர்த.குருகுலராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராஜா, தர்மபாலசெனிவிரட்ண, மா.தியாகராஜா, வி.ஜெயதிலக்க, செ.மயூரன் ஆகியோரும்கலந்துகொள்வர்.

சிறுவர்கள் முதல் பலரும் பங்கு பற்றக்கூடிய விளையாட்டுப் போட்டிகளான இனிப்புப் பொறுக்குதல், யானைக்குக் கண் வைத்தல், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணைச்சண்டை, சமநிலை ஓட்டம், கிறீஸ்மரம்ஏறுதல்ஆகியன நடைபெறவுள்ளன என்றும், அவற்றில் வெற்றிபெறுபவர்களுக்குப்பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தெரிவித்தார். (இ)